754
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அன்பளிப்பு
754
வழங்கியவர்

அன்பளிப்பு,

திருவாளர் ..... அவர்களுக்கு.

கோம்பை முகையதீன் பலதுறைக் கோவை.

இதனுள்

(வண்ணமும் வாழ்த்துமுள்ளன.)

இஃது

திருநெல்வேலி ஜில்லா, வண்டானம் தமிழ் வித்துவான்

உயர் திருவாளர்

மரியசிங்கக் கவிராயரவர்களால்

இயற்றப்பெற்று

உத்தமபாளையம்


ஜனப் S. M. நயினர் முகமது அவர்களால்

அச்சிட்டு, வெளியிடப்பெற்றது.

தேனி ரஹீம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1943.

226



உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர்

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	சிறப்புப்பாயிரம்	1
2.	சாற்றுக்கவிகள்	3
3.	பாட்டுடைத் தலைவரவர்களின் படம்	
4	பாட்டுடைத் தலைவரவர்களின் வரலாறு	1
5.	முகவுரை	1
6.	அரங்கேற்றுச் செய்யுள்	
7	நூல்	1
8.	வண்ணம்	25
9.	அகப்பொருள் தனித்துறைக் கவிகள்	32
10.	வாழ்த்துப்பாக்கள்	38
11.	பிழை திருத்தம்	1

செந்தமிழ் நாவலர், தேசாபிமானி

கம்பமாநகர்

ஜனப். மி. பீர்முகம்மதுப் பாவலரவர்கள்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

அறுசீர் அகவல் விருத்தம்.

அகப்பொருளி னிலக்கணத்தை நுணுகியுணர் மாணறிவ
னணியி லியாப்பின்
மிகப்பெரிய புலமையன்வண் டானத்து மரியசிங்க
மேலோ னியார்க்கு
முகப்பருளு மொளியுடையா ளரைப்பாடி யறன்பெருக்க
லோடன் னூர்தாந்
தகப்பரிசில் பாலிக்கத் தனித்தமிழை வளர்த்துவருந்
தன்மைக் கேற்ப

(2)

பொருப்பதவி யாதுதமிழ்ப் புலவருய்யப் பொருளுதவி
புரியும் வள்ளால்
விருப்பதவி யாச்சுடரா மெய்ப்பரன்பால் வைகலுங்கொள்
விழுப்ப மிக்க
திருப்பதவி பெறுமுகைய தீன்பிள்ளைச் செம்மாலாண்
டிலகா வென்று
பருப்பதவி யின்பதியாந் தென்கோம்பைக் கோமானைப்
பரிவாய்ப் போற்றி

(3)

ஒருதலைக்கா மத்திணையைத் திணைவணம்பஃ றுறைக்கோவை
யொன்றி யாத்துத்
தருதலைக்கா தாரக்கேட் டின்புற்றேம் பேரொளியின்
சால்பி னூலே

பொருதலைக்கா ணுதுபுறம் போக்குமிர வியிற்பகையைப்
புறங்கண் டென்றும்

விருதலைக்கா கினியுலுறு முகையதீன் பிள்ளைநெஞ்சும்
வேட்கு மன்றே

(4)

ஒருங்குதிரை வாருதிபோ லணியணியா யெழீஇமுன்ன
மூலகை வென்ற

பெருங்குதிரை வீரர்குல மணிவிளக்கா மூகையதீன்
பிள்ளை முன்றி

னெருங்குதிரை யீசெனப்பா வாணர்தமை நெறிப்படுத்து
நீரிந் நூல்வான்

மருங்குதிரை வகைத்தருவின் கனிப்பிழியோ வானவர்
கொண் மருந்தே கொல்லோ

(5)

சேய்நாட்ட மரைப்போல வுலகோரைக் காத்ததிருத்
தேமா நந்தந்

தாய்நாட்ட வாவினிலே தலைசிறந்து விளங்கியசீர்
சான்றோ ரன்றோர்

வாய்நாட்ட லுற்றபெருங் கொள்கையெலாங் கடைப்பிடிக்கு
மதிமான் வேல்போற்

பாய்நாட்ட மடவார்க்கு மதன்முகைய தீன்பிள்ளை
பாரில் வாழி

வெண்பா.

(6)

பொன்னேபோ லிந்நூலைப் போற்றியச் சிட்டளிக்குந்
தன்னேரில் செல்வத் தகையாளன்—றுன்னவையின்
முன்னூர் நயினூர் முஹம்ம திளங்கோவும்
பன்னூலும் வாழ்கசிறப் பாய்

சாற்றுக் கவிகள்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ் உதவிப் பத்திராசிரியர்,

பிர்மஸ்ரீ இராமாநுஜையங்கார் அவர்கள்

இயற்றியது.

அறுசீர் அகவல் விருத்தம்.

(7)

மகமதியர் குலமோங்க வண்டமிழர் கீழ்வாழ
மன்னு கோம்பை
நகரிநில மேற்சிறக்க வருமுகைதீன் மீதுதமிழ்
நாவ லோர்கள்
அகமகிழப் பலதுறையும் நிலவுமொரு கோவையுடன்
அரிய வண்ணம்
தகவுமிக வுரைத்தனன்வண் டானநகர் மரியசிங்கச்
சதுரன் மன்னே

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர்,

பிர்மஸ்ரீ R. வீரராகவையங்காரவர்கள்

இயற்றியது.

நேரிசை ஆசிரியப்பா.

(8)

குணம்பல பழுநிய குலவுறு தொல்சீர்
நகைமுக மேய முகைதீன் என்னும்
கோம்பை நகர்வாழ் குரிசில் பெயரால்
அமிழ்தினு மினிய அகப்பொருட் டுறையுட்
பலதொகுத் திணைத்த பலதுறைக் கோவையும்
வண்ணமும் புலவர் மகிழ யாத்தனன்
வண்டா னப்பதி வாழ்வுறு கவிஞன்
மரியசிங் கப்பேர் மருவிய நல்லோன்
ஈங்கிவன் தமிழ்ப்பணி யியற்றி
வாழ்க! ஊழி மகிழ்ஈனி சிறந்தே

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர், உயர்திரு, சு. நல்லசிவன் பிள்ளையவர்கள் இயற்றியவை

அறுசீர் அகவல் விருத்தம்.

பொற்றருவை நிகர்கொடையோன் கோம்பைநகர்
தனிலுறைவோன் புகழ்மிக் கார்ந்தோன்
கற்றவர்தங் கவிப்புலமை கவியினிமை தெரிந்துதவுங்
கருணை மிக்கோன்
பற்றலருங் கேட்டுவப்பப் பாலொடுதேன் கலந்ததெனப்
பகரின் சொல்லோன்
வெற்றிமிகுந் திடுமுகைதீன் பெயர்புனைந்தோ ளுகுமித்த
மிந்த மேலோன் மீது

(10)

வண்டானந் திகழ்தடமூந் தடம்பொழிலுஞ் சூழ்ந்திலங்கு
வளமிக் கோங்கு
வண்டானமெனும்பதிவாழ் மரியசிங்க நாவலவன்
மகிழ்ச்சி கூர்ந்து
கண்டோசர்க் கரையோமுக் கனிதேனே வெனவினிக்கக்
கவிதை யாத்து
விண்டாவு சீர்த்தியகப் பொருட்டுறையிற் கோவைவண்ணம்
விளம்பினனே

(11)

எந்நூலு மிந்நூலுக் கிணையிலவென் றெடுத்திசைக்கு
மேற்றம் வாய்ந்த
நன்னூலுஞ் சின்னூலும் பன்னூலு நனியுணர்ந்த
நாவ லோசாம்
மூன்னேரி னூல்போன்று சொற்சுவைகள் பொருட்சுவைகள்
முதிர்ந்து தோன்ற
இந்நூலி லமைத்திறவாப் புகழ்பெற்ரு னிவன்றிறமை
யியம்பொ ணுதே.

மதுரை செயின்ட்மேரி உயர்தரக் கலாசாலைத் தலைமைத்
தமிழாசிரியர்,
உயர்திரு. பண்டித. அ. முத்துச்சாமிப் பாவலரவர்கள்
இயற்றியவை.
அறுசீர் விருத்தம்.

(12)

சீர்பூத்த தமிழ்ப்புலவர் குழாம்புகழக் கொடைகொடுக்குஞ்
சிறப்பு வாய்ந்தோன்
வர்பூத்த குணங்களெலா மோருருவாய்த் திரண்டன்ன
இயல்பு பெற்றோன்
பேர்பூத்த நபிதிலகம் காட்டியநன் னெறிபிறழாப்
பெருமை யாளன்
பார்பூத்த பயன்மரமொன் றார்கடுவிற் பழுத்தனைய
பண்பின் மிக்கோன்.

(13)

பாம்பையணிந் திடுபரம னருளியதீந் தமிழ்மொழியிற்
பற்று மிக்கோன்
காம்பைநிகர் தோண்மடவார் காமுறுநல் லெழிலுடையான்
கவிஞர் செல்வக்
கோம்பைநக ருறைமுகைதீன் பிள்ளாசா வுத்தரெனுங்
கோமான் மீது
நாம்புகழும் பலதுறைக்கோ வையுஞ்சிறந்த வண்ணமதும்
நவின்றிட் டாலால்

(14)

அன்னவன்யா ரெனிற்றமிழிற் பண்டைமுறைப் படிநூல்கள்
அமைக்க வல்லோன்
பன்னரிய பலவளமும் பழுநியவண் டானமெனும்
பதியில் வாழ்வோன்

உன்னதமா கியசித்த மருத்துவத்திற் கைதேர்ந்த
உறுதி யுள்ளோன்
நன்னயமார் குணசீலன் மரியசிங்க மெனப்பெயர்கொள்
நாவல் லோனே

மதுரை செயின்ட் ஜோஸப் உயர்தரக் கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர், பிர்மஸ்ரீ வித்துவான்,
S. ஆழ்வார் ஐயங்கார் அவர்கள் இயற்றியது,

பூமிக்க தருவோங்கு கோம்பைநகர் வாழ்பெரும்
புண்ணியன் கண்ணி யன்சேர்
புலவர்மன மகிழவே பொன்மிகப் பொழிகொண்டல்
புந்திமிக வுடைய கோமான்
நாமிக்க பல்புகழ் மூகையதீன் பிள்ளோரா
வுத்தரென நண்ணு சீமான்
நலமீனத் தும்பல துறைக்கோவை வண்ணமெனும்
நற்பாக்க ளிற்சொல்லினன்
தேமிக்க செந்தமிழ் மொழிக்கணுறு பன்னூல்கள்
தேர்ந்துகவி செய்ய வல்லான்
சீலமொடு ஞாலமிசை செய்யபன் னற்குணஞ்
சேரப் பிறங்குமேலோன்
மாமிக்க சோலைசூழ்ந் தழகாய வண்டான
மாநகரி மருவியென்றும்
மன்னுபுக ழெங்கணுந் துன்னவே வாழ்வுகூர்
மரியசிங் கப்புலவனே.

மதுரை செயின்ட்மேரி உயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியர் உயர்திரு, பண்டித. மீ. கந்தசாமிப் புலவரவர்கள் பாடியவை.

எண்சீர் விருத்தம்.

(16)

திருவளர்பூம் பொழில்பொய்கை செல்வர்போலச்
சென்றிடுவண் டினமுணத்தேன் செலுத்துங் கோம்பை
மருவியவன் முகைதீன்பேர் பெற்றுன் யார்க்கும்
வழங்குகைக ளுடன்பெரும்பேர் வாய்க்கப் பெற்றுன்
பொருவறுசெந் தமிழ்மொழிதாய் மொழியாய்ப் பெற்றுன்
புலவர்கள்தங் கூட்டுறவே பொருந்தப் பெற்றுன்
கருதுவண்டா னப்பதிவாழ் மரிய சிங்கக்
கவிச்சிங்கம் வாய்புகழ்நற் காலம் பெற்றுன்

(17)

மைவண்ணக் கொடைச்சீதக் காதி வள்ளல்
மகிமைபடிக் காசன்சொல் வண்ணம் போல
உய்வ்வண்ணம் வருபவர்கட் குரிய வண்ணம்
உவந்தளிக்கும் முகைதீன்பேர் ஓங்கும் வண்ணம்
செவ்வண்ணத் தீந்தமிழ்தேர் மரிய சிங்கம்
சிறப்புறுபல் துறைக்கோவை செப்பி மேலும்
இவ்வண்ணம் இனியொருவர் இயம்பா வென்றே
யெண்ணும்வணம் வண்ணமுமொன் றியம்பி ஞனே

(18)

விருத்தமுதற் பலவகைப்பாக் காள மேகம்
விடாதுபொழிந் தெனப்பொழியும் விதத்து வல்லான்
திருத்தமுறச் சொலல்வல்லான் உயிர்நோ யான
செகத்தவர்தம் மடந்தவிரத் தேற்ற வல்லான்
மருத்துவத்தால் உடல்நோயும் போக்க வல்லான்
வளர்பொழில்சூழ் வண்டான மரிய சிங்கம்
அருத்தியுறப் புகழேந்தி யானன் இன்னும்
அவனுலகில் பொருவில்லி யாக மாதோ.

மதுரை செயின்ட்மேரி உயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியர், உயர்திரு, வித்துவான் S. வீரநாராயணன் அவர்கள் இயற்றியது.

அறுசீர் விருத்தம்.

(19)

நன்னலமாம் பொருணலமும் தொடைநலமும் நடைநலமும்
நயக்கும் மற்றைச்
சொன்னலமு மிதின்மிகுந்த தெனப்புலவர் குழாம்புகழ்ந்து
சொல்லக் கோம்பைப்
பொன்னகரில் வாழ்முகைதீன் மேல்வணம்பல்
தறைக்கோவை புகழ்ந்து சொற்றான்
பன்னரிய கலைப்புலவன் மரியசிங்க மெனப்பெயர்கொள்
பாவல் லோனே.

மதுரை செயின்ட்மேரி உயர்தரக் கலாசாலை உதவித் தமிழாசிரியர், உயர்திரு. வித்துவான். வே. நாராயணசாமி அவர்கள் இயற்றியவை.

எண்சீர் விருத்தம்.

(20)

மலைவ ளங்களுங் கலைவ ளங்களு மாண்பு மிக்கநன்
னிலைவ ளங்களு
நிலைபெ றும்புனல் வளமு மற்றுள நிறைவ ளங்களுங்
குறைவி லாதமைந்
திலையெ னும்பதப் பொருள நிந்திடா ஈகை மாந்தர்
வாழ் கோம்பை மாநகர்த்
தலையு றைந்தவன் முகைய தீனெனுந் தகுதி சேர்திருப்
பெயர்சி றந்தவன்

(21)

அன்ன வன்பல கல்வி கேள்விகள் ஆர்வ முற்றுநன்
கோர்ந்து தேர்ந்தவன்
இன்ன தன்மையாற் புலவர் பற்பல ரீண்டி நற்பொருள்
ஆண்டுச் சொற்றனர்
சொன்ன நாற்கவி பாடு நாவலன் தூறைமி குந்தசீர்
மரிய சிங்கமும்
கன்ன னேர்வணங் கோவை பாடினன் களிமி குந்திவன்
நெடிது வாழ்கவே.

எரசக்கநாயக்கனூர் ஜமீன், பூசாரிக்கவண்டன்பட்டியில்
வசிக்கும்உயர் திருவாளர். ச. திருமலைவேற் கவிராயரவர்கள்
இயற்றியது.

நேரிசை வெண்பா.

(22)

முத்தமிழ்தேர் கோம்பை முகியித்தீன் வள்ளன்மிசைப்
புத்தமிழ்தே யென்னப் புகன்றனனன் — மெத்தப்
பிரியமூறு வண்ணமுடன் பேணுபல பாவு
மரியசிங்க மாம்பா வலன்

உத்தமபாளையம் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்,
பண்டித வித்துவான்,
உயர்திருவாளர், தி சங்குப் புலவரவர்கள் இயற்றியவை.

அறுசீர் அகவல் விருத்தம்.

(23)

பாலனங்க ருணைவருவா ருளங்களிக்க கன்களிசுரும்
பண்பு சேர்பூ
பாலனங்க ணையர்வியந்து கண்டுமயல் கொண்டரவப்
பாயன் மாயன்
பாலனங்க சனிவனென மயங்கவரும் வடிவழகன்
பங்க யத்திற்
பாலனங்க ளினிதுதுயில் பொய்கைவளந் திகழ்கோம்பைப்
பதியில் வாழ்வோன்.

(24)

கருவரிய விகள்பயிலு மலர்த்தொடைய லணிபுயத்தான்
கருதா ரென்னுஞ்
சருவரிய கலவலிமை யொளியொடிவ ணெழுமிரசி
தன்பா லென்று
வருவரிய லுணர்க்கவிரு ளெனவெதிர்பார்த் தவருள்ள
மகிழு மாறு
பொருவரிய பரிசளித்துப் புகழ்பரப்பு முகியித்தின்
பூமான் மீது

(25)

ஓருவண்ண முடனினிய வகப்பொருட்பஃ றுறைக்கோவை
யுவந்து சீர்த்தி
வருவண்ண மிதுவெனநன் மனத்தாய்ந்து வழுத்தினலல்
வனச மேவுந்
திருவண்ண வளம்பலசேர் வண்டான மெனும்பதியிற்
சிறக்க வாழ்வோன்
கருவண்ண வுததியுடை யவனிபுகழ் மரியசிங்கக்
கவிஞன் மாதோ.

(26)

எழுத்துமுத லாகியவைந் திலக்ஷணமு மிலக்கியங்க
ளெவையுந் தேர்ந்தோன்
அழுத்தமுற நாற்கவியு மைம்பாவு மூவினமு
மமைக்க வல்லோன்
வழுத்துபுகழ் சேர்மரிய சிங்கமெனு மிப்புலவன்
வகுத்த விந்நூல்
பழுத்ததமிழ்ப் புலவர்கண்டு பயந்தேனங் குளமென்னும்
பான்மைத் தாமால்

(27)

இத்தகைய நூலினையச் சியற்றியுல கிற்குதவு
மிசைபெற் றுனவ்
வித்தகன்யா ரெனிற் செல்வ மிகவுடையான் றகவுடையான்
மேகந் தோயுங்

கொத்தலரும் பூம்பொழிலுங் குளிர்தடமுஞ் சூழ்ந்தவளங்
குலவு மேன்மை
யுத்தமபா ளையநகரம் வாழ்நயினர் மூகமதெனு
முயர்பூ மானே.

முத்தமிழ்ச் சக்கரவர்த்தி, மு. மாம்பழக் கவிச்சிங்கம்
அவர்களின் பிரபந்தத்தைத் தொகுத்த
மார்க்கையன்கோட்டை
உயர்திருவாளர். பழனிச்சாமி ஆச்சாரியாரவர்கள் மருகரும்
மாணக்கருமான திருவாளர், M. S. சுந்தரமாச்சாரியாரவர்கள்
இயற்றியது.

ஆசிரிய விருத்தம்.

(28)

பண்டான மறைதேடு மொருதனிப் பொருளினருள்
பரவுசௌ பாக்யயோக்யன்
பழகுமக ணிதவகண் டிதகுண மொருங்குதிகழ்
பாரமார்த் திகசிலாக்யன்
பாவாண ருக்குமிக விருநிதி வழங்குபூ
பாலகோ லாகலன்சீர்
பன்னலங் கெழுகோம்பை நன்னகரின் மன்னர்கள்
பாவலை குங்குபேரன்
கண்டான தீஞ்சொன் மடந்தையர் விழைந்திடுங்
காமனை நிகர்த்தபூமன்
கண்யலா வண்யநிதி யாமுகைய தின்றுரைக்
கண்ணியல்ப தாகமிளிரும்
கவின்விதா ணந்திறன்மி குந்தசீர் கண்டிலது
கவிதையிற் சித்தரித்துக்
காட்டுதிற னிலதுபல கவிவல ரிருப்பவங்
கமலமது பருகவருகும்
வண்டான தினமான வண்டான வபிதான
மருவுமா நகரிருந்து

வந்ததோர் சிங்கமச் சிங்கத்தின் முன்னர்வரு
மற்றைய தசிங்கமாகும்
வல்லபம் பெறுமரிய சிங்கமெனு நன்னுமம்
வளர்பெரிய சிங்கம்வந்து
மாதுரிய வண்ணமொடு பலதுறைக் கோவையும்
வணைந்துதவி னனதைக்கண்
டுண்டான வுவகைக்கொ ளவிலது பெருமிதத்
தொளிருமுத் தமபாலையத்
துலவுகன வானழகு குலவுநயி னூர்முகம்ம
தோங்குதன வான்சிறந்த
உத்தமன் கைபெறவு கல்லார்கள் தொட்டபொரு
ளொன்ற னந்தமென்னு
முரைதேற வச்சேறி யன்னவன் புகழ்போலு
மூலகிற் பரந்தமாதோ.

சின்னமனூர் சிவாலய அறநிலையர் உயர்திருவாளர்.
கு. அண்ணுமலைப் பிள்ளையவர்கள் இயற்றியது.

வெண்பா.

(29)

கோம்பை முகைதீன் கொடைவள்ளல் மேல்வணமு
மாம்பலீறுறைக் கோவையுநன் காக்கினுன்—நாம்பன்
னரிய பலகலைக ளாய்ந்தவன் டான
மரியசிங்க மாநா வலன்

பெரியகுளந் தாலுக்கா கூடலூர் போர்டு பாடசாலை ஆசிரியர்
உயர்திரு. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் இயற்றியது.

அறுசீர் அகவல் விருத்தம்.

(30)

திருமிளிருங் கோம்பைநகர் தனிலுறையும் முகைதீனுஞ்
செம்மல் மீது
பெருமைதரு கோவையுடன் வண்ணமெனும் பிரபந்தம்
பிறங்கச் செய்தான்

தருவளர்பூஞ் சோலைகள்சூழ் வண்டானப் பதியில்வளர்
தமிழ்ப்பா வல்லோன்
அருமைமிகு மரியசிங்கக் கவிஞனுயர் நாவலர்க்கோ
ரமுதாய் மன்னே.

மதுரைத் தமிழ்ச்சங்க அங்கத்தினரும்,
கோம்பை சக்தி குருகுலப் பேராசிரியருமான
ராஜாராம், திருமலை ஜக்கையாக் கவுடரவர்கள் இயற்றியவை.

அறுசீர் விருத்தம்

(31)

நன்மணமே கமழ்சோலை நாட்டுமப்பல் வளநிறைந்த
நகராங் கோம்பை
நன்மைபெற வேயுதித்த நாயகன்செந் தமிழ்ப்பணியை
நாளும் போற்றும்
என்மனமு வந்தநண்பன் எழில்முகைய தீன்பிள்ளை
இசையா ளன்மேல்
பன்மணிபோற் கோவைவணம் பாடிமிகப் பரந்தபுகழ்
படைத்தா னன்றே.

(32)

கண்டானந் தம்பெருகுங் காட்சிமிகுங் கலைவளர்க்குங்
கருத்த தூய
வண்டானப் பதிமேவும் மதிவாணன் பலபாவும்
வழுத்து நாவோன்
பண்டான செந்தமிழின் பண்பறிந்து பொலிவுற்றுப்
பரிம ளித்தே
எண்டிசையுங் கொண்டாடும் மரியசிங்க நாவலவன்
என்றும் வாழ்க.

(33)

அனுமந்தன்பட்டி பிர்மஸ்ரீ.
அ. சு. கிருஷ்ண ஸ்வாமி அய்யங்காரவர்கள் இயற்றியது.

அறுசீர் விருத்தம்.

திருவளருங் கோம்பைநகர் திகழ்முகைதீன் செம்மலிசை
சிறக்க வெங்குந்

தருவளர்வண் டானநகர் மரியசிங்கப் பாவலன்செய்
தமிழ்ப்பா வெல்லாம்
பெருகவச்சிட் டுதவினனுத் தமபாளை யப்பதியிற்
பிறங்கு மேலோன்
பொருவில்கொடைக் கரநயினர், முகம்மதெனப் புலவர்புகழ்
புனிதன் மன்னே.

---

(34)

கோம்பை நகரம், கம்பராமாயணப் பிரசங்கி, திருவாளர். சங்கர. காமையா மணியமவர்கள் இயற்றியது.

வள்ளல் முகியித்தீன் பிள்ளையின்மேல் வண்ணமுடன்
தெள்ளியசீர்க் கோவையொன்று செப்பினனன்—விள்ளரிய
வண்டானம் வாழும் மரியசிங்க மாபுலவன்
கண்டானந் தங்கொளவே காண்.

உத்தமபாளையம் தமிழ் இலக்கியமன்றக் காரியக்குழுவினர், உயர்திருவாளர். மு. சண்முகம் ஆச்சாரியாரவர்கள் இயற்றியது.

அறுசீர் அகவல் விருத்தம்.

சீர்வளருங் கோம்பைநகர்ச் செம்மல்முகை தீனனுமோர்
செழித்த வெற்பில்
எர்வளரும் வண்டானப் பதிமரிய சிங்கமெனும்
எழிலி கல்வி
நீர்வளருந் தமிழ்க்கடலின் மொண்டுவனங் கோவைபிற
நீசார் செய்யுள்
கார்வளருந் தாரைபொழிந் ததுபுலவோ ருளமசிழ்வு
தழைக்கத் தானே.

பாட்டுடைத் தலைவரவர்களின் வாழ்க்கை வரலாறு.

பொன் விளையும் புண்ணிய பூமியாகிய நமது பரத கண்டத்தில் வதியும் நாற்பதுகோடி மக்களும் தானம் மொழி இனம் மதம் ஆகியவைகளால் பல்வேறு வகைகளாகப் பிரிந்திருப்பது கண்கூடு. இந்நாட்டிலுள்ள சகல சமயத் தினரும் ஒன்றுபட்டு வாழ்ந்து இன்புற வேண்டுமென்பதே தேசாபிமானிகளின் விருப்பம்.

வட இந்தியாவில் இந்துமுசல்மான்கள் இடையிடையே சிற்சிலகாலம் பூசலுற்றிருப்பினும் பெரும்பாலும் ஒத்து வாழ்ந்தார்கள் என்பதைச் சரித்திரம் கூறுகின்றது. எனி னும் தற்காலம் இவ்விருதிறத்தாருக்குள் சிறிது மாறுபாடு கள் இருப்பது அறிஞர் அறிந்ததே.

ஆனால் நம் தென்னாட்டில் இந்து முஸ்லீம்கள் சௌ ஜன்யமாய் ஒத்து வாழ்கிறார்கள் என்பது ஒருதலை. சில நூற் றாண்டுகளுக்கு முன்னர் இங்குள்ள பற்பல வகுப்புகளி லிருந்து முஸ்லீமானவர்கள் அதிகம் உண்டு. ஆகையால் பிணக்குறாது பழக்கவழக்கங்களிலும் மனப்பான்மையிலும் ஒன்றித்து வாழ்ந்து வருகிறார்கள். இது மகிழத்தக்க காரியமே. மதுரையை யாண்ட காஞ்சாகிப் என்பவர் இராம நாதபுரம் வேளாள வகுப்பில் தோன்றி முஸ்லீமானவர், என் பதைப் பலரும் அறிவர். பாட்டுடைத் தலைவராகிய ஜனாப். உ. ம சே. மு. அவர்களது முன்னோர்களும் பாண்டிநாட்டுப் பரம்பரை வகுப்பினராய் சிவகாசியில் வாழ்ந்துவந்தார்கள். இவர்களது குடும்பம் பெரியபிள்ளை இராவுத்தர் கூட்டம் எனப் பிரசித்திபெற்றது. பந்துவர்க்கத்தினர் பர்மா, மலேயா சயாம் முதலிய நாடுகளில் பெருத்த வர்த்தகம் புரிந்து வருகிறார்கள். உதுமான் மைதீன் இராவுத்தர் அவர் களுடைய புதல்வர்கள் ஐவரில் ஞானியார் இராவுத்தர் அவர்

களும் நம் தலைவரின் தந்தையாராகிய ஷேக்கப்தல் காதிறு ராவுத்தர் அவர்களும் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் உத்தமபாளையத்தில் குடியேறி ஜவுளி வியாபாரம் செய்து வந்தார்கள். இரண்டு வருடங்கட்குப் பின்னர் நம் தலைவரின் தந்தையார் கோம்பையிற் குடியேறி ஜவுளி வியாபாரம் புரிந்துவந்தார் இவர் கல்வியில்லாமேனும் கேள்வி ஞானம் மிக்கவர். ஞாபகசக்தி சொல்லுறுதி நாணயம் முதலிய நற்குணங்களால் ஜனரஞ்சிதராய் வாணிபத்தில் படிப்படியாய் விருத்தியடைந்தார். புகழும் செல்வமும் பூண்டார். பிரயாணவசதியில்லாத அக்காலத்தில் முஸ்லீம்களின் புண்ணிய ஸ்தலமாகிய அரேபியாவிலுள்ள மக்காவிற்குப்போய் வந்தார். அதனால் ஜனங்கள் அவரை மக்கத்து இராவுத்தரெனக் கூறுவார்கள். ஹாஜியார் என்னும் பட்டமும் பெற்றார். ஒருவன் வினைக்காக்கம் செவ்வியனுதல் என்பதற்கிணங்க ஒழுகிவந்தார். கற்றோர் இவரைச் சுற்றியிருப்பர். சிறுப்புராணம், இராமாயணம், பாரதம், இதர வேதாந்த நூல்கள் முதலியவைகளைக் கேட்பதில் விருப்புள்ளவர்.

இப்பெருந் தகையாளருக்குப் புதல்வர்கள் மூவர். தபக்கல் சாகிபு இராவுத்தர், முகைதீன் பிள்ளை இராவுத்தர், சின்ன முகைதீன் பிள்ளை இராவுத்தர் என்னும் இவர்கள் தக்க தமிழறிவும் தேசப் பற்றும் உலகியலறிவும் பெற்றவர்கள். மகனுரைக்கும் தந்தை நலத்தை, என்னும் முதுமொழிக் கிலக்கானவர்கள். தளராத சிந்தையாலும் விடாமுயற்சியாலும் பரோபகாரத்தாலும் நமது முகைதீன்பிள்ளை இராவுத்தர் அவர்கள் செல்வாக்கும் கீர்த்தியும் பெற்றார். அஷ்ட ஐசுவரியங்களும் இவரை யடைந்தன. இப்போது வயது அறுபதாகும். பாலியத்தில் மூன்றுவது வகுப்பு வரையிலுந்தான் படிக்க முடிந்தது. சுமார் பன்னிரண்டு வயது முதற்கொண்டே குடும்ப நிருவாகத்தில் ஈடுபட்டு வர்த்தகத் தறையிலிறங்கினர். பதினாறு வயது நடக்கும் போதே கிராம முன்னேற்றத்திற்குரிய பல காரியங்களில் ஈடுபட்டு ஒழுங்குபட நடத்தி வந்தார். சிறந்த தமிழ்க் கவிஞர்களது பழக்கத்தாலும், நூல்களாலும் பல சஞ்சிகை

களையும் படித்து வந்ததாலும் தன் கல்வியைப் பெரிதும் விருத்திசெய்துகொண்டார். இதனால், கட்டுரை வரைதல் பிரசங்கிக்கும் சொல்வன்மை சுதந்தர உணர்ச்சி ஆகியவை இவருக்கு உண்டாயின. மேல் கலங்கினும் மனங்கலங்காதவீர். இவரது வியக்கத்தக்க முன்னேற்றத்திற்கு மூலகாரணமாயிருந்தவை, தளரா மனமும் விடா முயற்சியும் மதிநுட்பமுமேயாகும். வித்யாநி சத்போதனி சபையொன்று நிறுவி உபதலைவராக இருந்து நடத்திவந்தார்.

வங்காளப் பிரிவினை காரணமாக 1906ல் நடந்த கல்கத்தாக் காங்கிரசுக்குப் பின் வீறுகொண்டெழுந்த தேசியக் கிளர்ச்சியின்போது தமிழ்நாட்டுத் தலைவர்களான வ. உ. சிதம்பரம் பிள்ளை சுப்பிரமணியசிவா பாரதியார் ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆகியோருக்குப் பக்கபலமாயிருந்து அஞ்சா நெஞ்சுடன் பெருந் தொண்டாற்றினார். சிறைப்பட்ட தேசாபிமானிகளின் குடும்பங்களுக்குத் தானே பணவுதவி செய்தும் நிதி திரட்டியுதவியும் வந்தார். 1907ல் சூரத்துக்குடி சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி ஏற்பட்டபோது அதில் பங்காளியானார். தேசத் தொழில் அபிவிருத்தியைக் கருதி கோம்பையில் சுதேச ஏலக்கிருஷிக்கம்பெனியொன்று நிறுவித் திறப்பட நடத்தினார். அதைப்பற்றிய விளம்பரத்தில் வயிற்றுப் பிழைப்பிற்காக வந்த வெள்ளையர்கள் என்று இவர் கூறியதற்குக் காரணங் கூறுமாறு கேட்டுத் திண்டுக்கல் டிப்டி கலெக்டர் முன்னிலையில் நடந்த விசாரணையில் மனிதஉடலெடுத்த யாவரும், வைசிராய்முதல் சகல உத்தியோகஸ்தர்களும் உத்தியோகம் வகிப்பதும் ஏராளமான சம்பளங்களைப் பெறுவதும் வயிற்றுப் பிழைப்பிற்காகவே, யென்று விளக்கிக் காட்டி வயிற்றுப் பிழைப்புக்கு என்று சொல்லுவது தவேசமாகாதென்று வெள்ளையர்களை ஒப்புக்கொள்ளச் செய்தார்.

1911ல் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ், கொலை வழக்கில் எதிரியான ராகவேந்திரராவ் என்பவரை மறைத்து வைத்திருப்பதாக உண்டான புரளியால் பரிசோதனைக்கும்

ஆளாக நேர்ந்தது. 1925ல் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை, நாகபுரி கொடிப்போர், முதலிய கிளர்ச்சிகளை நடத்திய காங்கிரஸ் தலைவர்களுக்கு உதவி செய்தார். நாகபுரி போராட்டத்திற்குக் கோம்பையிலிருந்து தொண்டர்களை அனுப்பியதற்குக் காரணம் இவரே. 1923ல் பெரியகுளந் தாலூக்கா காங்கிரசு மகாநாடு டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்களின் தலைமையில் உத்தமபாளையத்தில் நடந்தது. தலைவருக்கு 144 தடையுத்தரவு கிடைத்தபோது காங்கிரஸ் நண்பர்கள் மீறக்கூடாது என்றார்கள். கனம் இராவுத்தரவர்கள் மீறத்தான் வேண்டுமென்று வற்புறுத்திக் தலைவரின் அபிப்பிராயத்தை ஆதரித்தார்கள். இக்குறிப்பு தமிழ்நாடு பத்திரிகையில் வெளிவந்துளது. உப்பு சத்தியாக்கிரகம் சட்டசபைப் பிரவேசம் முதலிய இயக்கங்களில் தமது உடம்பு நிலையும் கம்பெனி நிர்வாகப் பொறுப்புங் காரணமாக நேரிடையாய்க் கலந்துகொள்ளாவிட்டாலும் அவ்வப்போது தேசபக்தர்களுக்கு பலவகைகளிலும் ஆதரவளித்துவந்தார். 1930ல் கோம்பையில் கள்ளுக்கடை மறியல் சந்தர்ப்பத்தில் பகைவர்கள் ஏவலால் துப்பாக்கிக் குண்டுக்கும் ஆளானார். குண்டு ஒருவிலா நடுவிற் பட்டு ஊடுருவி மறுவிலாவில் தங்கியுள் இறைவனருளால் இன்னலின்றிப் பிழைத்தார். எதிரியைக் குறித்து சாக்ஷிகள் அடையாளம் சரியாகச் சொல்லியும் இராவுத்தரவர்கள் இவனைப்போல இருந்தது என்று சொன்னபடியால் எதிரி விடுதலையடைந்தான். இதனால் கோர்ட்டாரவர்களும் கோர்ட்டிலிருந்த வக்கீல் முதலிய சமஸ்தர்களும் இராவுத்தரவர்களின் உண்மை நிலையைக் குறித்து வியப்படைந்தார்கள். காந்தியடிகளின் கதராடைக் கொள்கையைக் கடைப்பிடித்துள்ளார். 1934ல் காந்தியடிகள் ஹரிஜனநிதி திரட்டத் தென்னாட்டிற்கு வந்தபோது கோம்பை தேவாரத்திற்கு விஜயம் செய்ய இவர்களுடைய முயற்சியும் முக்கிய காரணம். ஏலவிவசாய சங்கம் நிறுவியவர்களில் முக்கியஸ்தராயிருந்து சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்குப் பெருநன்மை புரிந்தார். உத்தமபாளையம் முஸ்லிம் சாபிமகாஜன சங்கப் பள்ளிவாசலுக்கு நன்கொடையாக ரூ. 1000 கொடுத்தார். 27 லட்ச ரூபாய் மூலதனங்கொண்ட

கோம்பை எலக்காய் விற்பனைக் கம்பெனி மானேஜிங் டைரக்டராயிருந்து திறம்பட நடத்தினர். இந்தியாவில் முக்கிய நகரங்களான கல்கத்தா, பம்பாய், டில்லி, ஆக்ரா, கான்பூர், கராச்சி, அமிர்தசரஸ் முதலியவைகளிலும் ஏடனிலும் இக் கம்பெனியின் கிளைகளை யமைத்து ஏல விவசாய வாலிபர்களை அங்கு அனுப்பி வர்த்தகப் பயிற்சி பெறச் செய்தார். ஏல விவசாயக் கோவாப்ரேட்டிவ் பாங்கில் காரியதரிசியாகவும் பிரஸிடெண்டாகவும் இருந்தார். நிர்த்தாட்சண்யமான பேச்சு செயல்காரணமாகப் பாங்குக் கடனாளிகளான சில நண்பர் களின் மனஸ்தாபங்களுக்கு ஆளாக நேர்ந்தும் சிறிதும் கலங் காது உறுதியுடன் எதிர்த்து நின்றார். இந்த இரண்டொரு ஆண்டுகளாய்த் தமிழ் நூல்களை ஆராய்ந்து தமிழ்ச்சுவையை அனுபவித்து வருகிறார். தம்மையண்டிவரும் தமிழபிமானி களுக்கும் வித்துவான்களுக்கும் ஏழைகளுக்கும் பேருதவி புரிந்து ஆதரித்து வருகிறார். கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் மிக்க இராவுத்தரவர்கள் ஓர் சமஸ்தானம் போன் றவர்.

தமிழ் நலம் விரும்பும் அமுத கவிவலவர்: வண்டா னம் (கிறிஸ்தவ) மரியசிங்கக் கவிராயரவர்கள் இஸ்லாமிய இருநிதிச் செல்வராகிய கனம் இராவுத்தரவர்கள்மீது பாவா னர் போற்றும் பலதுறைக் கோவை, வண்ணம் ஆகிய பிர பந்தங்களைப் பாடியது பரமானந்தத்தைத் தருகின்றது. எனது முன்னேற்றத்திற்குரிய காரணரான கனம் இராவுத்த ரவர்களின் வாழ்க்கை வரலாற்றை இந்துவாகிய யான் எழுத நேர்ந்தது பற்றி மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.

தேசாபிமானமும் தமிழார்வமும் சூறிப்பறிந்து கொடுக் கும் வள்ளற்றன்மையும் வாய்ந்த கனம் இராவுத்தரவர்களுக் குச் சுகவாழ்வும் தீர்க்காயுளும் நிறைந்த செல்வமும்பெருகத் தந்தருளும்படி மனம் மொழி மெய்களால் எல்லாம் வல்ல இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

நலம்! நலம்!! நலம்!!!

R. திருமலைஜக்கையா,
பேராசிரியன்,
சக்திகுருகுலம்.

கோம்பை,
5—12—43.

முகவுரை.

"கோம்பை முகைதீன் பலதுறைக் கோவை" என்னும் தலைப்புடன் விளங்கும் இந்நூலைக் கண்ணுற்றேன். இது கோம்பைமா நகரிற் பிரபல செல்வராகிய முகைதீன்பிள்ளை இராவுத்தரவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு வண்டானம் தமிழ்ப் புலவராகிய **மரியசிங்கக் கவிராயர்** அவர்களால் இயற்றப்பட்டுள்ளது. இதன்பால் அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழும் கோவை நூலுக்குரித்தான பலதுறைகளைத் தழுவி வரையப்பட்ட கட்டளைக் கலித்துறைகள் நாற்பத்துநான்கும், சந்தவண்ணம் ஒன்றும், அகப்பொருட் டுறைகளைத் தழுவிய தனிச் செய்யுட்கள் பத்தும், வாழ்த்துச் செய்யுட்கள் பதினைறும், வரலாற்றுசிரியம் ஒன்றும் அமைந்து அணி செய்கின்றன. இந்நூற் பாடல்கள், சொல்லழகும் பொருட் பொலிவும் புதிய கற்பனைத் திறங்களும் நிரம்பப் பெற்றுப் படிப்போரைப்பண்டைய இலக்கிய நூல்களுக்கு இழுத்துச் செல்லும் கவர்ச்சி வாய்ந்து விளங்குகின்றன.

இனி இந்நூலின் பாட்டுடைத் தலைவராக விளங்கும் கோம்பை **முகைதீன் பிள்ளை இராவுத்தரவர்கள்**, இவ்வட்டகையிலுள்ள சிறந்த செல்வர்களில் ஒருவராவார். இறைவன் திருநாமத்தை எக்காலும் மறவாத மனமுடையவர்கள். மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் பொதுநல ஆர்வமுங் கொண்டவர். கற்றோர்க்கு உற்றோராய் விளங்குங் கண்ணியவான். செல்வத்தின் பயனறிந்து வாழும் பண்புடையவர். எந்நேரமும் தமிழ் நூல்களைப் பயில்வதிலும் அவற்றின் சுவையறிந்து மகிழ்வதிலும் விருப்பமுடையவர். புலவராயினோர்க்குப் பொருள் கொடுத்துதவும் புகழ்சான்ற வள்ளலாவார். இன்னவரின் உயர்வை எண்ணுந் தோறும்,

"ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன எட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்துப் பயனென்ன கைபரப்பிப்
போயா சகமென் றிரப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் வேள்சீ தக்கா தியொருவ னுமே"

எனப் புலவர்களால் பாராட்டப்பட்ட மூகமதியப் பெருவள்ளலாகிய சீ தக்கா தி மரைக்காயர் அவர்களின் கொடை வாழ்வு நினைவுக்கு வருகின்றது.

இங்ஙனம் புலவர்கள் பாடத் தகுதிவாய்ந்தவர்களைப் பாராட்டிப் பிரபந்தங்களும் தனிப்பாடல்களும் இயற்றி நன்றியறிதலைத் தெரிவிக்கும் மரபு பண்டைக்காலத்தில் மிகுதியும் போற்றப்பட்டது. வள்ளல்களா யிருந்தவர்களும் புலவர்கள் வாயால் தாங்கள் புகழ்ந்து பாடப்படுவதைப் பெறுதற்கரிய பேறுகளில் ஒன்றாகவே கருதினர். இதனை

"புலவர்பாடும் புகழுடையோர் விரும்பின்
வலவன் ஏவா வானவூர்தி
எய்துபவென்ப தன் செய்வினைமுடித்து"

என்ற பண்டைக் காலப் புலவரொருவரின் வாய்மொழியும்

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகளன் நிலவரை"

என்ற பாண்டிய மன்னன் கூற்றும், நந்தன் என்ற குறு நில வேந்தன் தன்னைப் பாடவேண்டுமென ஔவையாரை வேண்ட அப்பிராட்டியார் மறுத்தவரலாறும், பிறவும் தெளிவாக விளக்குவனவாம். இவ்வாறு பாடலில் தமது புகழுடம்பை நிறுவிய அக்கால வள்ளல்களின் கொடைத் தன்மையை எண்ணுந்தோறும் வாழ்க்கையின் பயன் இன்னதென்பது புலனாகின்றது.

இனி இந்நூலாசிரியராகிய வண்டானம் மரியசிங்கக் கவிராயரவர்கள் சிறந்த தமிழ்ப்புலமையும் உலகிய லறிவும் வாய்க்கப்பெற்றவர்கள். சென்ற ஓராண்டுக் காலமாக இவர் களுடன் பழகியதிலிருந்து இவர்களின் கல்வியாற்றலையும் கவிகள் இயற்றும் திறனையும் நற்குண நல்லொழுக்க மாண்பு களையும் கண்டு இன்புறும் பேறு கிடைத்தது. "யாவையும் பாடிக் கோவை பாடுக" என்பது அறிஞர் வாக்கு. இதனை யுன்னுவார்க்குக் கோவை பாடுதற்கு எத்தகைய ஆற்றல் வேண்டுமென்பது விளங்கும். அத்தகைய ஆற்றலை இந் நூலாசிரியர் இயல்பாகவே பெற்றிருக்கின்றார் என்பது மிகை யாகாது. சுருங்கக் கூறுமிடத்து இவர் பண்டைக்கால நூலாசிரியர்களுடன் சேர்த்து எண்ணத்தக்க ரென்பதும், இவரால் இயற்றப்பட்ட இந்நூலும் பெருமை வாய்ந்த நூல் களுடன் ஒன்றாக வைக்கத்தக்க தென்பதுப், எனது கருத் தாகும். இதற்குமுன்னர் இவரால் இயற்றப்பட்ட தியாகராஜ வண்ணமும், இந்நூலுள் ஒரு பகுதியான வண்ணமும், கற் பார்க்குக் கண்டனைய சுவையூட்டத்தக்கனவாம். இத்தகைய மொழிப் புலமையுடன் மருத்துவப் புலமையும் பெற்று விளங்கும் இவர்கள் இன்னும் இத்தகைய நூல்களை வெளி யிட்டு உதவத்தமிழ் மக்கள் ஊக்குவார்களாக.

இத்தகைய சிறந்த நூலை இக்காலத்தில் அச்சேற்று வது மிகவும் சிரமமான காரியம். பொருட் செலவு மிகுதி யாவதொருபுற மிருப்பினும் காகிதம் கிடைப்பதுதான் கடின மாக இருக்கிறது. இந்நிலையில் இதனை அன்புடன் அச்சிட மூன்வந்த உத்தமபாளையம், ரண்பர். ஜனப். மு. நயினார் முகம்மது அவர்களைப் பாராட்ட வேண்டும். இவர் தனது முயற்சியினாலேயே முன்னேறிய இளைஞர் திலகமா வர். "பாம்பே ஷாப்" ஜவுளிக்கடை, மளிகைக்கடை முதலிய வர்த்தக நிலையங்களை ஏற்படுத்தி வருவாயைப் பெருக்கி வரும் முயற்சியாளர். தமிழ்ப் பற்றும் சீர்திருத்த நோக்கும் கொண்டவர். நற்காரியங்களுக்குப் பொருளைச் செலவு செய்யும் பண்புடையவர். இந்நூலின் பாட்டுடைத்

தலைவருக்குப் பேரன் என்ற முறையில் நெருங்கிய உறவி னருமாவர். எனவே நமது அரிய நண்பர் இந்நூலை அச்சி யற்றி வழங்கியதற்குத் தமிழுலகம் என்றென்றும் அவரு க்கு நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

இங்ஙனம்,

வித்துவான். சி. இராமசாமி,

தமிழாசிரியர்,

உயர்தரப் பள்ளி, உத்தமபாளையம்.

(மதுரை ஜில்லா.)



அரங்கேற்றிய இடம், காலம், குறிக்கும் கவி.

உத்தமபாளையம் உயர்நிலைப் பள்ளித் தலைமைத்

தமிழாசிரியர், பண்டித வித்துவான்

உயர்திருவாளர், தி. சங்குப் புலவரவர்கள்

இயற்றியது

பன்னிருசீர் அகவல் விருத்தம்.

பகர்கின்ற கலியுகத் தையாயி ரத்துநாற்
பத்துநான் கினில்வருஞ்சு

பானுவாண் டின்மகர மதிநான்கு தேதியுடு
பதினஞ் சத்தமிதி

நிகழத்த நாட்காலை பதிணென்ற ரைக்குமே
னேருமங் கலவோரையில்

நேயமுறு முகைதீன்பு மான்மீது தான்பாடு
நிகரிலாத் தமிழ்நூலினைக்

ககனமுறு பொன்னுலக நேர்திருக் கோம்பையிற்
கன்னிகா பரமேஸ்வரி

காமருநன் ஞமமமை யிந்துக்கள் பயிலியற்
கைப்பாட சாலைதன்னின்

மகிமையுறு மனோன்மணி யாசிரியனென்றுபகர்
மரியசிங் கப்பாவலன்

மன்னர்கோ விற்பன்னர் கூடுசல் லவையிடை
மகிழ்ந்தரங் கேற்றினனே.

கோம்பை முகைதீன் பலதுறைக் கோவை.

மெய்ப் பொருள் வணக்கம்.

அறுசீர் அகவல் விருத்தம்.

பூவின்மணம் பொன்னிலொளி போற்பூதம் பௌதிகம்
பொருந்தி நின்றும்
யாவினும்வே றுகியொளி யருளறிவின் வடிவாகி
யானே கண்ட
தூவிலிலா விழியார்போற் பலமறைகள் சொலநின்றுன்
றொழுமென் னுள்ளக்
கோவிலுறை பெருமானக் கோமானைப் பணிந்துகளி
கூர்ந்துய் வோமே.

(இ-ள்) மலரில் மணமும், பொன்னிற் சுடருப்போல, மண், நீர், தீ, காற்று, ஆகாயம், ஆகிய ஐந்து பூதங்களிலும் அப்பூத பேதங்களாகிய, உயிர்ப்பொருள், உயிரல் பொருள் ஆகியவைகளிலும் கலந்து நின்றுலும், அப்பூத பூதிகங்கள் எவையிலுந் தான் வேறுபட்டு, ஒளிவடிவும் அருள்வடிவும் அறிவு வடிவும் உடையவனுகி, யானையைத் தடவிக்கண்ட சுத்தமான பிரகாசமில்லாத விழிகளையுடைய பிறவிக்குருடர் போல, வேறு வேறுகிய வேதங்களெல்லாம் வேறு வேறுவித மாகக்கூற, தன்னியல்பிலே நின்ற இறைவனே எனது மனக் கோவிலின்கண் வாழும் பெருமை மிக்கவன். அந்தத்தலைவனை வணங்கி மகிழ்ச்சி மிகுந்து ஈடேறுவோம் என்பதாம்.

குரு வணக்கம்.

கலி விருத்தம்.

அரிய நாயக னுதரை மீதினைப்
பிரிய மாக வளர்த்த பெருந்தகை
உரிய வோதி யுதவிய மாதுலன்
மரிய நாடன் மலரடி வாழ்த்துவாம்.

அறுசீர் அகவல் விருத்தம்.

ஆக்கைதனைச் செருப்பாக்கி யர்சேனின் றிருவடிக்கண்
ணணித்திட் டாலுன்
பூக்கைபுரி நன்றிகளுக் கிணையாமோ புண்ணியனே
புலியே னுன்பொன்
வாக்கையவ மதித்ததற்கெ னுடலரிந்து குவித்தாலு
மாசு போமோ
காக்கைகின தருளன்றிப் பிறிதுண்டோ சிரத்தனது
கழல்கொண் டேனே

எழுசீர் அகவல் விருத்தம்.

பலர்நலங் கெடுத்துத் தன்னலம் பெருக்கும்
பான்மைகொள் பாவியர் மிகுந்த
நிலமிசை நினது நலங்கரு தாதென்
நிறைநல நினதென நேர்ந்தாய்
மலர்மதி முகனே யானுமென் வழியார்
மரபுமு னடியவ ராமே
புலமிகு முனக்கே தொழும்புசெய் திருத்தல்
பொருவறு பெருந்தவ மெனக்கே.

அவையடக்கம்.

எழுசீர் அகவல் விருத்தம்.

வள்ளுவர் திருநூன் முதற்பல நூலும்
வகையுடன் றெளிந்தவர் வயினிப்
பிள்ளைவெண் மதியேன் கவியுரைத் திடுதல்
பேதமை யெனினுமப் பெரியோர்
கிள்ளையின் மொழியுங் கிளர்பசுங் குதலைப்
பிள்ளையின் கிளவியு மென்னக்

கொள்ளுவ ரல்லாற் குறையெனக் கோடா
தெனவுளங் கொண்டியம் பினனே

நூற் காரணம்.

அறுசீர் விருத்தம்.

உற்றதமிழ்க் கலைத்தெளிவுந் திருவுநறங் குணமுமெலா
மொருங்கே யோங்கப்
பெற்றெனதன் பினைக்கவர்ந்த கவித்தலைமை யுறத்தகுதி
பிறங்க லானும்
மற்றிடரைக் களைந்தெனது மனமகிழச் செய்வனென
மதித்த தாலும்
சொற்றனனிக் கவித்தொடையல் சுகுணமுகை தீன்பூமான்
சூடற் கென்றே

நூல்

கைக்கிளை.

கைக்கிளை:—ஒருதலைக் காமம். அஃது ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளையென இருவகைப்படும். அவற்றுள் இஃது ஆண்பாற் கைக்கிளை.

காட்சி.

தலைவன் தலைவியைக் காண்டல்.

கட்டளைக் கலித்துறை.

(1) பொன்னுர் கமலங் குவளை குமுதமெட் பூத்தொளிரு
மின்னுர் கொடிமதி வேய்ந்து முகிறலை மேற்சுமந்தே
என்னுயி ரிந்தை விழியோகை கொள்ள விலங்கியதால்
மன்னுர்வ மோடு புகழ்முகை தீன்பொன் வரையிடத்தே

இ-ள். அழகு பொருந்திய தாமரை, நீலோற்பலம், அல்லி, எள், இவைகளின் மலர்கள் பூத்து, விளங்குகின்ற மின்னற்கொடியானது, சந்திரனையணிந்து மேகத்தைச் சுமந்து கொண்டு, எனது உயிரும் உள்ளமும் கண்களும் மகிழ்ச்சி கொள்ளும்படியாக விளங்கியது. எங்கெனில் அரசர்களும் அன்புடன் போற்றற்குரிய முகைதீனது அழகிய மலையின் கண்ணே.

ஐயம்.

இம்மாது தெய்வ மகளோ மானிட மகளோவென்று தலைவன் ஐயுற்றுக் கூறுதல்.

(2) வரைமக ளோமதன் காதலி யோமலர் வாழ்மகளோ
தரைமக ளோதமிழ்ப் பாவல ரோங்கத் தருவெனவே
நிரைநிதி யீயுங் கரத்தினன் கோம்பையு ணீதிநிறைந்
தரைமலி சீர்த்தி முகைதீன் வரையுற்றவரே

இ-ள். தமிழ்க் கவிஞர் உயரும்படியாகக் கற்பகம்போல் பரந்திருளும் திரவியமும் கொடுக்கும் கைகளுள்ளவனும், கோம்பைப் பதியின்கண்ணே நீதிமலிந்து பிறர் போற்றும் நிறைந்த சிறப்பு மிக்கவனுமாகிய முகைதீனது மலையின் கண்ணே பொருந்தி நிற்கும் இவர் வரையரமகளோ! இரதியோ! தாமரைப் பூவில் வாழும் இலக்குமியோ! பூமகளோ! எவரென அறியேன்.

துணிவு.

(3) வாடின தாம மலிந்தள கந்தனில் வண்டினங்கள்
கூடின பூவடி யுற்றன பூண்டொழில் கொண்டனவள்
ஓடின கண்ணிமை யொன்றின கன்றி யுலந்தயரேல்
நீடின சீர்முகை தீன்மரு வாரென நீமனமே

இ-ள். எனது மனமே! உயர்ந்த சிறப்புள்ள முகைதீனது பகைவர்களைப்போல நீயுலந்து நெகிழ்ந்து சோராதே. இம்மாது அணிந்துள்ள மாலைகள் வாடின. கூந்தலில் வண்டுகள் நிறைந்து பொருந்தின. பாதங்கள் பூமியில் படிந்தன. ஆபரணங்கள் வேலைப்பாடமைந்துள்ளன. காதுகளின்வரை சென்ற கண்களின் இமைகள் பொருந்தின. ஆதலின் இவள் மானிட மகளே.

குறிப்பறிதல்.

தலைவிக்குத் தன்பால் வேட்கையுண்டென்று அவளுடைப் பார்வைக் குறிப்பைக்கொண்டு தலைவன் அறிந்துகொள்ளுதல்.

4 தருநோக் கியகரத்தான் முகைதின்வரைத்தண்பொழில்வாய்
வருநோக் குடையயில் போலிய லாளயில் வாள்விழியுள்
இருநோக்குளகடுப்போலுமொன் றென்றவ் விடரறுக்கு
மருநோக்கமுதென லாகுநெஞ் சேநம தாருயிர்க்கே

இ-ள். கற் கழும் வியந்துநோக்கும் கைகளையுடையவ னகிய முகைதீனது குளிர்ந்த மலைச்சோலையின் கண்ணே, வருகின்ற அழகுள்ள மயில்போன்ற சாயலுடையாளது கூரியவாள்போன்ற கண்களுள் இரண்டுபார்வைகள் உள்ளன. அவற்றுள் ஒருபார்வை நஞ்சையொக்கும். அத்துயர் நீக்கும் பெருமை பொருந்திய மற்றொரு பார்வையானது நமது நிறைந்த சீவனுக்கு அமுதமென்று சொல்லலாம்.

இயற்கைப் புணர்ச்சி.

இயற்கை-ஊழ். ஊழ்வினை கூட்டுவிக்கக்கூடும் புணர்ச்சி. இது தெய்வப் புணர்ச்சி யெனவும் கூறப்படும்.

இரந்து பின்னிற்றற் கெண்ணல்.

தன்குறைகளைச் சொல்லித் தலைவியின் பின்னே இரந்து நிற்றற்குத் தலைவன் எண்ணுதல்.

(5) பண்ணிற் சிறந்த மொழியுடை யான்றனைப் பாடினர்க்கே
எண்ணிற் சிறந்த நிதிதந் திடுநல் லியல்புடையான்
மண்ணிற் சிறந்த முகைதீன் வரையில் வழுத்தியிதம்
பெண்ணிற்சிறந்த விவண்முலைப்போகம்பெறுதுநெஞ்சே

இ-ள். இசையைப்போல் மிகுந்த இன்சொல்லனும் தன்மேற் கவியுரைத்தார்க்கு மதிப்புமிகுந்த திரவியந் தரு கின்ற சிறந்த தன்மையுள்ளவனுமாகிய உலகிலுயர்ந்த முகை தீனது மலையின்கண்ணே இன்மொழி கூறி, பெண்களுட் சிறந்த இவளது கொங்கைகளின் இன்பத்தை, என்மனீம, நாம்பெறுவோம்.

இரந்து பின்னிலை நிற்றல்.

இரந்து தலைவியின் பின்னே நின்ற தலைவன் வழிபாடு செய்தற்கு முயன்று நிலைநிற்றல்.

(6) நல்விற் பனநபி நாயகந் தந்தரு ணன்மறையே
சொல்வித் தகநெறி யான்முகை தீன்வரைத் தோகைநல்லாய்
கொல்விற் கணையுயிர்க் கேவித் தலைநனி கோட்டிநிற்றல்
கல்வித் துறைபல தேர்ந்னைக் கேற்ற கனிலலவே

இ-ள். சிறந்த வள்ளலாகிய நபிநாயகந் தந்தருளிய நன்மையுள்ள திருவேதம் கூறிய ஞானமார்க்கத்தையுடைய முகைதீனது மலையின்கண்ணே நிற்கும், மயிலியலுடைய அழகிய பெண்ணே! நின்கண்ணுகிய கொல்கின்ற வில்லம்பை எனது உயிர்மீது விடுத்து மிகவும் தலைகுனிந்து நிற்பது, பலவிதக் கலைத் துறைகளில் தேர்ந்த உனக்குப் பொருந்திய அழகில்லை.

முன்னிலையாக்கல்

தலைவியைத் தனக்கு முற்படுத்தித் தலைவன் கூறுதல்.

(7) தேயத் திடர்கெடச்செய்செய லான்முகை தீன்வரையார்
தோயச் சுனைகுடைந் தொண்மலர் கொய்துநிற் சூழ்திருகல்
ஆயத் திடைவிளை யாடல்செய் யாதசை வற்றுநிற்கும்
மாயத் தினைவிளம் பாய்களம் பாய்விழி மாதரசே

இ-ள். இந் நாட்டினது அடிமைத் துயர்நீங்கப் புரியுஞ் செய்கைகொண்ட முகைதீனது மலையிலுள்ள மிகுந்த நீருள்ள சுனையில் நீராடி ஒள்ளிய பூக்களைக் கொய்து நின்னைச் சூழுகின்ற பாங்கிமாரிடையே விளையாடாது அசைவற்று நிற்கின்ற மாயத்தை, நஞ்சு பாய்ந்த கண்களையுடைய பெண் ணரசியே நீ சொல்வாயாக.

வண்டோச்சி மருங்கணைதல்.

நாணினால் வருந்தும் தலைவியின் பக்கத்தையடைந்த தலைவன் அவள் கூந்தலில் விளங்கும் மாலையில் மொய்த் திருக்கும்வண்டுகளை ஓட்டுவான்போல நெருங்குதல்.மருங்கு இடையுமாம்.

[இது, மெய்தொட்டுப் பயிறல் எனப்படும்.]

(8) கோடிய கோற்கிடையுங்குடிகூட்டுணுங்கொள்ளையர்போல்
பீடிய லங்குயத் தானை மருங்கிறப் பேதைகுழல்
நாடியுற் றீரெம் முகைதீன் பொழிற – நண்ணுறுமின்
வாடிடை வீயி னுமக்கே பழிவரும் வண்டிமேன.

இ-ள். வண்டுக் கூட்டங்காள்! நீதி தவறிய அரசனுல் வாடிய குடிகளைக் கொள்ளையடிக்குங் கொள்ளைக் கூட்டத் தார்போல சாமுத்திரிக முறைப்படி யமைந்த அழகிய கொங் கைகளால் மெலிந்த இடையானது ஒடியும்படி இப்பெண்ணி னது கூந்தலைத் தேடிச் சேர்ந்தீர்கள். எமது முகைதீனது சோலையையும். வாவியையுஞ் சேருங்கள் மெலிந்த இடை யொடிந்தால் உங்களுக்குப் பழியுண்டாகும்

இதுவுமது

(9) மாதங்க வோங்குதிண் டோண்முகைதீன்வரைவாய்வயங் மாதங்க ளார்குழல் வாழ்வி காளுயர் மால்வரையு [கும் மாதங்க மெய்த வளர்மூலக் கொல்கிடை மாய்ந்திடலம் மாதங்க லேதளி நாம முமக்கு வருமிழிவே.

இ-ள் இலக்குமி வாழும்படி யுயர்ந்த வுறுதியுள்ள தோள்களையுடைய முகைதீனது மலையின் கண்ணே விளங்கு கின்ற இப்பெண்ணினது கூந்தலில் வாழ்கின்ற வண்டுக் கூட் டங்காள்! உயர்ந்த பெரிய மலையும் வருந்தும்படி வீங்குகின்ற கொங்கைகளால் மெலிந்த இடையானது ஒடிந்தால் அம்மா! உங்களுக்கு அளியென் னும் பெயர் பொருந்தாது. அவமானம் வரும்.

பொய் பாராட்டல்

தலைவியின் அழகைத் தலைவன் புனைந்து கூறல்.

10. வேல்கண் டனைய வெழின்முகைதீன்வரைமெல்லிய னுன் தோள்கண்டு நாணி யமைவெற் படைந்தது தூமதியும் வாள்கொண் டிடுமுகங் கண்டு மெய்தேய்ந்தலைமாய்ந்ததுசெந் தாள்கண்டு நாணியன் றோவனம் புக்கது தாமரையே.

இ-ள். மன்மதனைத் பார்த்ததையொத்த அழகுடைய முகைதீனது மலையில் நிற்கும் மிருதுத் தன்மையுள்ள பெண்ணே, நினது தோளைக்கண்டு வெட்கி மூங்கில் மலை யைச் சேர்ந்தது. பரிசுத்தமுள்ள சந்திரனும் ஒளிகொண்ட உன் முகத்தைக் கண்டு உடல் மெலிந்து கடலில் வீழ்ந்தது. செவ்விய அடிகளைக்கண்டு வெட்கப்பட்டல்லவா தாமரை நீருள்ளே புகுந்தது.

இடம்பெற்றுத் தழாஅல்

உரிய இடத்தைப்பெற்றுத் தழுவுதலைத் தலைவன் விரும்பிக் கூறுதல். தழா அல்—தழுவுதல்

11. அல்லார் குழலினு மாடர வப்பட வல்குலினும்
வில்லார் விழியினு மேதிளை பட்டு விதிர்த்த நெஞ்சே
செல்லார் பொழில்புடை சூழ்கோம்பை வாழ்முகைதீன்
[வரையே
வல்லார் தடமுலை தோய்ந்தின்ப மூழ்கிட வாய்ப்பிடமே

இ-ள். இவளுடைய இருள் நிறைந்த கூந்தலினும், ஆடுகின்ற நாகத்தின் படமொத்த நிகம்பத்தினும், ஒளிபொருந்திய கண்களினும் கட்டுண்டு நடுங்கிய எனது மனமே! மேகங்கள் பொருந்திய சோலைகள் பக்கமாகச் சூழ்ந்துள்ள கோம்பை நகரில் வாழும் முகைதீனது மலைதான் இவளது சூதாடு கருவியொத்த பெரிய கொங்கைகளிற் பொருந்தி இன்பத்திலாழப் பொருத்தமான இடமாகும்.

வழிபாடு மறுத்தல்.

தலைவன் செய்த வழிபாட்டை நாணினால் மறுத்த தலைவி, தான் மறைந்துகொள்ளுதற் பொருட்டு ஒருமாதவிக் கொடியைச் சேர்தல்.

12. தெவ்வைக் கடந்த திறலுடை யான்முகைதீன்வரையில்
மல்வற் குழற்சி மார்நீங்க யான்றனி வந்துநின்றேன்
செவ்வைக்கண் சாந்த மசோகமுஞ் சூழச் சிறந்தளியும்
வவ்வுற்ற போத முடையையெற் காத்தருண் மாதவியே

இ-ள். பகையைக்கடந்த வலிமையுள்ளவனாகிய முகைதீனது மலையின் கண்ணே, முல்லை மலரணிந்த கூந்தலையுடைய தோழிமார் பிரிய நான்தனியே வந்து நின்றேன். செவ்விய குளிர்ந்த சந்தனமரங்கள், அசோக மரங்கள் சூழ்ந்திருக்கச் சிறப்புற்று வண்டுகளும் பற்றிப் பொருந்திய அழகிய பூக்களையுங் கொண்டனை. (ஆதலால்) மாதவியே நீ என்னைக் காத்தருள்வாயாக (சாந்தம், அசோகம், அளி, போதம், என்பன, முறையே, சாந்தகுணம், சோர்வின்மை, கருணை, ஞானம், என்னும் பிறிதுபொருளுந் தரும்.

இடையூறு கிளத்தல்

அப்மாதவியின் பாற்சென்ற தலைவி நாணினுல் தன் விழிகளைப் புதைக்க அதனுல்ண்டாகுந் துன்பத்தைத் தலைவன் கூறுதல்.

13 தனமெவ் வளவுதந் தாலும் பெரிதிலை தண்கமலத்
தனமன்ன நின்கயல் வாள்விழி நோக்கமருள் செழுஞ்சந்
தனமென் களபப் புயமுகை தீன்வரை சார்ந்திடுநந்
தனமன்னு கோகிலம் போன்மொழி வாணகைத்தாழ்
மழமேல்.

இ-ள். செழித்த மிருதுவான சந்தனக் கலவைக்குழம் பணிந்த புயங்களையுடைய முகைதீனது மலையிற் பொருந்திய சோலையில் வாழுங் குயில்போல் மொழியும் ஒளியுள்ள பற் களும் நீண்ட கூந்தலுமுடைய பெண்ணே! நீ எனக்கு எவ்வளவு தனத்தைத் தந்தாலும் பெரிதல்ல. குளிர்ந்த தாமரைப் பூவில் வாழும் அன்னத்தை யொத்த உனது கெண்டையும் வாளும்போன்ற கண்களின் அருட்பார்வை தருவாயாக. [தனம்—கொங்கை, நிதி.]

இதுவுமது.

14. கும்பத் தனமட வார்மட லூரக் குணிக்குமெழிற்
சம்பத் தினன்முகை தீன்றமிழ் நாட்டினர் தாரணியில்
தம்பொற் றனப்புதை யாரெனுந் தன்மைதனைத்தெளித்தோ
செம்பொற்கை கொண்டு விழிபுதைத் தீர்மலர்ச் சேயிழையே

இ-ள். தாமரைப் பூவில் வாழும் இலக்குமியொத்த மாதே! குடம்போன்ற கொங்கைகளையுடைய மாதர்கள் மட லூரக் குறிக்கும்படியான அழகுச் செல்வத்தையுடையவனுகிய முகைதீனது தமிழ்த் தேசத்தார், இவ்வுலகில் தங்கள் அழகிய தனங்களைப் புதைக்க மாட்டார்களென்னுந் தன்மையைத் தெளிவித்துத்தானே செவந்த அழகிய கைகளால் (தனம் புதையாது) கண்களைப் புதைத்தீர்.

இதுவுமது.

15. காருற்ற கையுடை யான்பணைக் கோப்பைமன் காவலர்நேர்
சீருற் றிடுமுகை தின்பொழி லார்செழுந் தேமலர்வாய்
நாருற் றளியின நண்ணிடு நின்கை வளினமலர்
கூருற்ற கண்ணளி யைக்கூட லற்புதங் கோற்றொடியே

இ-ள். மேகம்போல் கொடுக்குங் கரமுள்ளவனும், வயல்களைக்கொண்ட கோப்பைத் தலைவனும் மன்னரொத்த சிறப்புடையவனுமாகிய முகைதினது சோலையில் நிறைந்த மணமலரிடத்தே அன்புகொண்டு வண்டுகள் சேரும். கோற் றொடியே! உனது கைகளாகிய தாமரை மலர்கள் கூரிய கண்களாகிய வண்டுகளைச் சேர்வது ஆச்சரியமேயாகும்.

நீடு நினைந்திரங்கல்.

தலைவியின் செய்கையால் காலம் நீட்டித்தலை அறிந்து தலைவன் வருந்துதல்.

16. செந்தேனிகர்தமிழ்தேர்முகைதின் வரைச்சேயிழைவாய்ப்
பைந்தே னளித்துப் படத்தட மாட்டிநற் பாற்குடங்கள்
தந்தே வெந்தாக விடாயைத் தணிப்பது தானுமென்றோ
அந்தா மரைய னுளஞ்சிலை யாக்கின தற்புதமே

இ-ள். செவ்விய தேனையொத்த தமிழை யாராய்கின்ற முகைதினது மலையின்கண் நிற்கும் சேயிழையே! நினது வாயிலூறும் பசிய தேனைத்தந்து பாற்பின் படமொத்த அல்குல் தடாகத்தில் ஆடச்செய்து அழகிய தனங்களாகிய பாற் குடங்களைக் கொடுத்து கொடிய மோக தாகவிடாயைத் தணியச்செய்வது எப்போதோ. அழகிய தாமரைப் பூவில் வாழ்வோன் உன் உள்ளத்தைக் கல்லாகச் செய்தது ஆச்சரியமே.

மறுத்தெதிர் கோடல்.

தன் நாணத்தை மறுத்துத் தலைவனைத் தலைவி ஏற்றுக் கொள்ளல்.

17. சேரார்க் கடவிதந் தான்முகை தீன்வெற்பர்சிந்தைமிசை
கூரார் விரகக் கடனிறை யாங்கவை கொள்வதன்றுல்
ஏரா ரவர்புலப் புல்லுண வாவை யிடைமறித்து
நீரா ருண்பிணித் தாலு மறுத்திடு நிற்பதன்றே.

இ-ள். பகைவர்களுக்கு வனந்தந்தவனுகிய முகைதீனது மலையில் நிற்கும் இவரது உள்ளத்தின் கண்ணை பொருந்தி மிகுந்த காமக் கடலானது நிறையாகிய கரையால் அடக்கிக்கொள்ளப் படுவதில்லை. அழகுள்ள இவர் என்னைத் தழுவ அவரால் நான் தழுவப்படும் மிகுந்த ஆசையை முதற் குணமாகிய நாணத்தால் கட்டிலுலும் அறுத்துவிடும். நிற்பதில்லை.

வரிது நகை தோற்றல்.

தலைவி புன்னகை செய்தல்.

இது, கவிக்கூற்று.

18. மாணூர் நிறைமுகைதீன்வரைவாயெழின்மங்கைபின்னே
நாணுதலுந்து நலிந்தன மென்னு நலான்மகிழ
ஏணூர் வனசத் தறுந்துகிர் வள்ளத் திலங்குமுத்தங்
காணு வகைகிறி தேநகை செய்தனள் காரிகையே

இ-ள். மாட்சிமையும் அன்பும் நிறைந்த முகைதீன்து மலையினிடத்தே, அழகிய இம்மடவாள் பின்னே நாணமின்றித் திரிந்து மெலிந்தோமென்னுந் தலைவன் மகிழும்படி பெருமை தங்கிய முகமாகிய தாமரைப்பூவிலுள்ள வாயாகிய பலகைக் கிண்ணத்தில் விளங்குகின்ற பற்களாகிய முத்துக்கள் வெளித் தோன்றுத முறையில், அப்பெண் புன்னகை புரிந்தாள். இது கவிக்கூற்று.

முறுவர் குறிப்புணர்தல்.

தலைவியின் புன்னகையாற் பெற்ற உடன்பாட்டுக் குறிப்பினைத் தலைவன் அறிதல்.

19. தாமப் புயவழ கன்முகை தீன்வரைத் தண்பொழிலில்
ஏமப் பசுங்கொடி வாய்நகை மொக்கு ளிலங்கியதால்
காமப் புணரிக் கரையறி யாது கவன்ற நெஞ்சே
சேமப் புகணெரிந் தோமண மாங்கரை சேர்குவமே

இ-ள். மாலையணிந்த தோளழகுகிய முகைதீனது குளிர்ந்த மலர்ச் சோலையில் பசும்பொற் கொடிபோல்வாளது வாயிற் புன்னகையரும்பு விளங்கியது. காமக் கடலின் கரை காணுது வருந்திய மனமே! நம்மைக் காக்கும் மிதவையைக் கண்டு கொண்டோம். இனிக் கூடலாகிய கரையிற் சேர்வோமாக.

முயங்குத லுறுத்தல்.

தலைவியை முயங்குதற்கு அருமை கூறல்.

20. தொடைநா ணளிகிலை வேழமம் பாமலர் சூழ்மதவேட்
படைமாண் புடன்வரும் பாவை யுரத்திற் பணைத்தகிலு
டைவாண் மணிக்கிரி யுற்றனங் கூடலு முற்றிடுவோம்
கொடைசேர் மலர்க்கரத் தான்முகை தீனெழில் கொள்.
வரைக்கே

இ-ள். தொடுக்கின்ற கயிறு வண்டாகவும் வில் கரும்பாகவும் பாணம் மலராகவும் சூழ்ந்துகொண்ட மன்மதனது மாட்சிமையுள்ள படைகளாகிய மாதர்களுடன் வந்த பதுமை போன்முலின் மார்பிற் பருத்து வீத்திரமணிந்து ஒளியும் அழகும் பொருந்திய தனமாகிய மலையை யடைந்தோம். இனி மணமும் பொருந்துவோம். வண்மை தங்கிய மலர் போலுங் கையுடையவனுகிய முகைதீனது அழகுள்ள மலையின்கண்ணே.

புணர்ச்சியின் மகிழ்தல்.

21. தேன்பாய் மலரிவ ணுமரு வாமெனச் சேயரிக்கண்
மான்பா லணிந்து நலதுகர்ந் தோமரு வாரைவென்ற
கோன்பா வலர்மனங் கோணு தளிக்குங் கொடைச்சுரப்பூ
மான்பார் புகழ்முகை தீன்வரைக் காவின் மகிழ்மனமே.

இ-ள். பகைவரை வென்ற தலைவனும் கவிஞர் மனம் மாறுபடாமல் கொடுக்கும் வண்மையுடைய பூமானுமாகிய உலகுபுகழ் முகைதீனது மலைச் சோலையின்கண்ணே, இவள் தேன் நிறைந்த மலராகவும் நாம் மணமாகவும் செவ்வரி படர்ந்து மானையொத்த கண்களையுடையாளைக் கலந்து இன்ப மனுபவித்தோம், மனமே நீ மகிழ்வாயாக.

புகழ்தல்.

தலைவியின் நலத்தைத் தலைவன் பாராட்டல்

22. வயல்கொண்ட கோம்பை முகைதீன் வரையிலுன் வாள்
விழிபைக்
கயல்கண்டு நாணி யறல்புக் கதுநின் கருங்குழலைப்
புயல்கண்டு நாணிப் புனலுருத் திட்டது பூவதனத்
தியல்கண்டு நாணிக் குவிந்தது தாமரை யேந்திழையே

இ-ள். கழனி சூழ்ந்த கோம்பையில் வாழும் முகைதீனது மலையில் உயர்ந்த ஆபரணமணிந்த மாதே! உனது வாள் போன்ற கண்களை மீன்கண்டு வெட்கி நீருட் புகுந்தது. உனது கரிய கூந்தலை மேகம் கண்டு நாணமுற்று நீரைச் சொரிந்தது. உன் அழகிய முகத்தின் தன்மையைத் தாமரை மலர் பார்த்து நாணத்தைக் கூம்பியது.

இதுவுமது.

23. நீலத் துடன்குமிழ் மௌவல்செவ் வாம்பல் நிலவகிசுக்
காலத் திலுங்குவி யாமூட் படாத கவின்கமலம்
ஞாலத் திலுமுக மென்றுகொண் டாய்கண்டு நான்மகிழ்ந்
சீலத்திருமுகைதீன்வரைவாய்நறுஞ் சேயிழையே [தேன்

இ-ள் செம்மையாகிய செல்வத்தையுடைய முகைதீனது மலையின்கண்ணே அழகிய செம்பொன்னாபரணம் அணிந்த பெண்ணே! குவளைப்பூவொடு குமிழம்பூமுல்லைப்பூ செவ்வல்லிப்பூ ஆகியவை தன்னிடத்தே விளங்க, இராப் பொழுதிலும் கூம்பாமல் முள்ளில்லாத அழகிய தாமரைப்பூ இவ்வுலகத்திலில்லை, நீ அதை முகமென்னும் பெயரோடு வைத்திருக்கின்றாய் நான் கண்டு களிகூர்ந்தேன்.

வன்புறை.

தலைவியை நோக்கித் தலைவன் நான் பிரியே னென்று வற்புறுத்திக் கூறுதல்.

அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தல்.

தான் புனைந்தமை வேறு பாட்டைப் புலப்படுத்துமென்று தலைவி நாணியதை அறிந்த தலைவன் முன்போலவே அணிந்தே னென்று அவளைத் தெளிவித்தல்;

அணிந்துழி—அணிந்தவிடத்து.

24. ஒன்னுரை வீட்டி யுவந்தாரை யாக்கு முரனுடையான்
நன்னு வலர்புகழ் கோன்முகைதீன்வரைநற்பொழில்வாய்
பொன்னு ரணியும் புனைமலர்க் கோதையும் பூந்துகிலும்
முன்னுர் முறையணிந் தேன்குலையேலினி மொய்குழலே

இ-ள் நெருங்கிய கூந்தலையுடைய பெண்ணே! பகை வரை வீழ்த்தி மகிழ்ந்தாரை (தற்சேர்ந்தாரை) நிலைநிறுத் தும் வலிமை (அறிவு) யுள்ளவனும், நற்கவிஞர்களால் போற் றப்படும் தலைவனுமாகிய முகைதீனது அழகிய மலைச்சாலை யின் கண்ணே, பொன்னுபரணமும் அணிகின்ற மலர்மாலை யும் அழகிய கலையும் முன்புள்ளபடியே புனைந்தேன். (மாறு பட்டுளமோ வென்று) நீ வருந்தாதே.

பெருநயப்புரைத்தல்.

தனது மிக்க காதலைப் புகழ்ச்சி வகையால் தலைவன் உரைத்தல்; நயப்பு—விருப்பம்.

25. நாற்பூவு நாடித் திரிந்தெங்கு மென்று நறைகொளறு
காற்பூவரியினங்காள்கண்டதண்டெனிற்கட்டுரைமின்
மாற்பூ வனசங் குமிழ்தோன்றி நீல மலர்ந்தனுயிர்
போற்பூ வருங்கொடி நேர்முகை தீன்டொற் பொருப்
பினிலே.

இ-ள். நான்குவகைப் பூக்களையும் எங்கும் எப்போ தும் தேடியலைந்து அவைகளின் தேனை யுண்கின்ற ஆறு

கால்களையுடைய அழகிய வண்டின் கூட்டங்களே! முகைதீனது அழகிய மலையிலே (கண்டோர்) காதலிக்கும் பொலிவுள்ள தாமரை குமிழ் காந்தள் குவளை ஆகிய மலர்களைப் பூத்து எனது உயிர்போல்பவளாகிய இவ்வழகு வளர் கொடிபோல் (ஒரு பூங்கொடியைப்) பார்த்ததுண்டோ! கண்டதுண்டாஞல் கூறுங்கள்.

தெய்வத் திறம் பேசல்

(தம்மைச் சேர்த்து வைத்த ஊழ்வினையின் தன்மையைத் தலைவன் கூறுதல்);

26. மலங்கா மனமுடை யான்முகை தீன்வரை மாமயிலே
கலங்கா துயிர்க்கண நன்னெறி சேவவிக் காதினியில்
நலங்காண நன்னபி நாதனைத் தந்தரு ளல்குபரன்
விலங்கா துடலுயி ராக்கின னம்மை பெலியலெனே

இ-ள். மயங்காத உள்ளத்தை யுடையவனுகிய முகைதீன் மலையின் கண்ணே, பாண்புடைய மயிலே! போல்பவளே! மன்னுயிர்க் கூட்டங்கள் கலக்கமின்றி நன்மார்க்கத்திற் பொருந்தும்படியும், இவ்வுலகில் நன்மையுண்டாகும்படியும் நபிநாயகத்தைக் கொடுத்துக் கிருபை புரிந்த கடவுள், நம்மிருவரையும் பிரியாத உடலும் உயிருமாகச் செய்தான் (அப்படியிருக்க) நீ வாடுவது எதற்கு? (வருந்தாதே என்றபடி)

பிரியேனென்றல்.

27. தொல்லைப் பவவினை வீட்டிநல் வீடு தொடர்ந்தவர்பூ
எல்லைப் படுநலம் வேட்டிடு வார்கொ லெழின்முகைதீன்
நல்லைப் பனிவரை போன்முலை வாள்விழி நங்கையினி
இல்லைப் பிரிதல் பிரியினுந் தங்கில னெங்கணுமே.

இ-ள். அழகுடைய முகைதீனது நல்ல சிறந்த குளிர்ச்சி பொருந்திய மலைபோன்ற தனங்களையும் வாள்போன்ற கண்களையுமுடைய மாதே! பழமையான தீவினைகளை நீக்கி நல்ல முத்தியிற் சேர்ந்த சீவன் முத்தர்கள், இவ்வுலக எல்லைக்குட்பொருந்திய இன்பத்தை விரும்புவார்களோ. (விரும்பார்) அதுபோல் உன்னைச் சேர்ந்த நான் இனி மேற் பிரிவதில்லை. ஒருவாறு பிரிந்தாலும் எங்குந் தங்கமாட்டேன்.

பிரிந்து வருகென்றல்.

போய்வருவேன் என்று தலைவன் தலைவிக்குக் கூறுதல்!

28. வில்லோர் நுதலயில் வேலோர் விழிகஞ்ச மெல்லரும்பு
நல்லோர் முலைவல்லி நேரிடை யாய்சூ ணவில்வனுயர்
சொல்லே ருழவர் புகழ்முகை தீன்வரைச் சூழலுற்று
வல்லே வருவன் கணமுந்தங் கேனுள் வருந்தற்கவே

இ-ள். வில்லொத்த அழகிய நெற்றியையும் கூரிய வேல்போல் அழகிய கண்களையும் தாமரையின் மிருதுவான அரும்புபோன்ற சிறந்த அழகிய தனங்களையும் கொடிபோ லிடையையுமுடைய மாதே! சத்தியமாகச் சொல்லுகிறேன். புலவர்கள் போற்றும் முகைதீனது மலையிலோரிடத்திற் சென்று விரைவாக வருவேன். ஒருகணப்பொழுதுந் தங்க மாட்டேன். நீமனம் வருந்தாதிருப்பாயாக.

இடமணித் தென்றல்.

நம்முடைய ஊர்கள் ஒன்றற்கொன்று அணிமைக்கண் உள்ளனவென்பதைத்தலைவிக்குக் கூறுதல்; அணிமை-சமீபம்

29. ஆரணந் தோய்முகை தீன்வரை யார்பொழி லன்னமன்ன
ஆரணங் கேயெம தூர்மட வார்விளை யாடுசெய்குன்
முரணம் பச்சை மரகதப் பேரொளி யார்ந்துதுங்குன்
முரணை மானினம் புல்லெனக் கௌவி யலைந்திடுமே.

இ-ள். வேதத்தை ஆராய்கின்ற முகைதீனது மலையி லுள்ள சோலையில் வாழும் அன்னத்தையொத்த மாதே! எங் கூர்ப்பெண்கள் விளையாடுகின்ற செய்குன்றிற் பொருந்தப் பெற்ற மேலான அழகிய பசிய மரகத இரத்தினத்தின் பெருஞ்சுடர் உங்கள் மலையிற் சேர்ந்து பொருந்த இதிலுள்ள மான்கூட்டங்கள் புல்லெனக் கருதிக் கௌவித் திரிகின்றன. (ஆதலால், நம்பதிகள் தூரம் என்று வருந்தாதே.

தெளிவு

தலைவன் பிரிந்து வருவே னென்றதைக் கேட்டுத் தலைவி தெளிதல்.

30. மெய்சொற்றிடுந்தகையான்முகைதீன்றமிழ்வெற்பரொரு
பொய்சொற்றிடாருளங்காட்டிய தான்முகம் பூண்முலையா
னைசிற்றிடையென நைந்தலை யேலினி நன்னெஞ்சமே
வைதற்றியவபி லார்நமை விட்டுயிர் வாழுவரோ

இ-ள். எனதுநல்ல மனமே மெய்யே புகலும் பெருங்
குணப்படைத்தோனுகிய முகைதீனது தமிழ் மலையிலுள்ள
யிவர் யாதொரு பொய்யும் புகலார். இவர் மனத்தை முகம்
தெரிவிக்கின்றது. கூர்மை பொருந்திய வேலையுடையதலை
வர் நம்மைப் பிரிந்து உயிர்வாழ்வாரோ! (வாழார்) ஆபரணங்
களையுடைய தனங்களால் தேய்கின்ற சிறிய இடையைப்போல
இனிமேல் வருந்தி நெகிழாதே.

பிரிவுழி மகிழ்ச்சி.

செல்லுங்கிழத்தி செலவுகண்டுளத்தொடு சொல்லல்.

தலைவி பிரிந்து ஆபத்தினிடைச் செல்லுங்கால் அவள்
தோற்றத்தைக் கண்டு மனத்தொடு மகிழ்ந்து கூறல்.

31. செம்பொற் சிலம்பு புலம்பச் சிலைபுய றெண்மதியம்
அம்பொற் கமலங் குவளை தளவு மமைந்தொருபூங்
கொம்பற் புதமுட னன்னத்தி னன்னடை கொண்டது
நம்பொற்புறமுகைதீன்வரைவாய்ச்செலுநம்மயிலே [போல்

இ-ள் மனமே நமது பொலிவுபெற்ற முகைதீனது
மலையினிடத்தே, சிவந்த பொன்னாற் செய்த சிலம்புகளொ
லிக்க, வில், மேகம், தெளிந்த சந்திரன் மிருந்த அழகிய
சாமரைப்பூ, நீலோற் பலப்பூ, முல்லைப்பூ இவைகளைப் பொரு
ந்தி ஒரு பொற்கொம்பானது ஆச்சரியத்தோடு அன்னத்தி
னது அழகிய நடையைக்கொண்டு செல்வதுபோல நம்மு
டைய ஆவியானது செல்கின்றது.

தலைவி கனவுநலிபு உரைத்தல்.

தலைவனைக் காணுங் கனவுதன்னைநலிகின்றதென்பதைத்
தலைவி கூறுதல்;

32 தொல்லைத் துயிலடைந் தேனன்பர் வந்தென்கை தொட்
டிரவில்
லல்லைத் தொடர்ந்திவண் வாவென வேசொல வோகையுடன்
செல்லத் துணிந்தெழுந் தேன்விழித் தேன்மிகு செல்லலுற்
மல்லற் றடம்புயத் தான்முகை தீன்வரை மாமயிலே. [றேன்

இ-ள். வளப்பமுள்ள மலைபோன்றபுயங்களையுடையவ
னாகிய முகைதீனது மலையின்கண் உள்ள மாண்புடைய மயி
லொத்த சேடியே! இரவில் பழமையாகிய நித்திரையைப்
பொருந்தினேன். தலைவர் வந்து என்கரத்தைப் பற்றி விரை
வாக என்னைத் தொடர்ந்து இங்கே வாவென்று கூற, நான்
மகிழ்வுடன் போகத் துணிந்து எழுந்தேன். உடனே விழித்
துக்கொண்டேன். (அன்பரைக் காணாது) மிகுந்த துன்ப
முற்றேன்.

தலைவி கவினழிபு உரைத்தல்.

கவின் அழிபு—அழகு அழிதலை.

33 எங்கோ னிலாமை யறிந்தடல் வேடனம் பேவிவந்தே
எங்காணம் யாவையுங் கொள்ளையிட் டேகினனிங்கிதனை
அங்கா தலர்க்குரைப் பாயிலை யேலென தாவிபொன்றும்
நங்கா யுயர்முகை தீன்வரை வாயிதை நன்கறியே.

இ-ள். தோழீ! சிறந்த முகைதீனது மலையினிடத்தே
எந்தலைவரில்லை யென்று தெரிந்து வலிய மன்மதன் தனது
பாணங்களைச் செலுத்தி வந்து எம்மழகெல்லாம் கொள்ளை
யடித்துக்கொண் டேகினான். இங்கு நிகழ்ந்ததை
அழகிய அன்பர்க்குக் கூறக்கடவாய். கூறுதொழியில் என
துயிர் நீங்கும். இதை நன்றாகத் தெரிந்துகொள்வாயாக.
வேடன்—குறவன், காணம்—பொன், காணத்தக்க அழகு.

அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி.

பலர் கூறும் பழிமொழியை யறிந்து தான் கொண்டுள்ள
அச்சத்தைத் தலைவி கூறுதல்.

34. கருப்புச் சிலையெடுத் தேகுழைப்போனெழிற் கையலரும்
அருப்புத் தளவ நகையினர் வாயிடை யாரலரும்
மருப்புத் தனமட வாய்மிகப் போர்த்த மருவுகலை
விருப்பிற் பயின்முகை தீன்பகைபோ லுளம்விம்முற்றதே

இ-ள். கொம்புபோன்ற கொங்கைகளையுடைய சேடியே! கரும்பாகிய வில்லைத் தூக்கி வளைக்கும் மாரனது அழகிய கையிலுள்ள மலர்களும், முல்லையரும்பொத்த பற்களையுடைய மாதர்களுடைய வாயிற் பொருந்திவரும் பழிமொழிகளும், மிகவும் சூழ்ந்தன; பொருந்திய நூல்களை விருப்பத்தோடு ஆராயும் முகைதீனது பகைவர்களைப்போல எனது மனந் துன்புற்றது.

காமமிக்க கழிபடர் கிளவி.

கழிபடர்—மிக்க நினைவாலுண்டாகிய துன்பம்.
கிளவி—தலைவியின் சொற்கள்.

35 ஓங்குந் தறம்பயில் சீர்முகை தீன்புக ழொப்பமுந்நீர்
தாங்குந் தரங்க மெறிகட லேயுலர் சால்கழியே
வீங்குந் தகைய மகிழ்நர்ப் பிரிந்து மெலிந்துளமே
வங்குந் தனிய னிடர்கண் டிரங்கிலி ரேதெதுவே

இ-ள். உயர்விற் செலுத்தும் தருமத்தைப் புரிகின்ற சிறந்த முகைதீனது கீர்த்தியைப்போல பழமையான கரைத் தாங்கி அலைவீசுங் கடலே! உவர்மிக்க கழிநிலமே! மிகுந்த குணமமைந்த கொழுநரைப் பிரிந்து வாடி மனத்திலேக்க முறாம் தனியளாகிய எனது துன்பங்கண்டு நீங்கள் இரக்கங் கொண்டிலீர்; இதற்குக் காரணம் யாது?

வெறிவிலக்குவித்தல்.

வெறியாடுதலை விலக்கென்று தோழிக்குத் தலைவி கூறுதல். வெறியாட்டாவது தலைவியின் மயக்க உணர்ச்சியைக் கண்டு அவளைப் பேய் தீண்டியதென நினைத்துத் தமர்வேலனைக் கொண்டு முருகவேளை வழிபட்டுப் பலியிடுவித்தல் இதில் ஆடு வெட்டுதல் முதலியன நடைபெறுமென்பர்.

36. மணிசந் தகில்கொண் முகைதீன் வரையின் மருவியவர்
பிணிதங்கி னேன்பெரும் பேய்தங்கியதெனப்பேதையினை
கணிகொண் டிழிவெறி கொண்டனளீங்கிதைக்கைவிடவே
துணிகொண்டுமைமருந்தீருகிவேல்விழித்தோகைமின்னே

இ-ள் இரத்தினங்களையும் சந்தன மரங்களையும் அகில் மரங்களையும் கொண்ட முகைதீனது மலையின் கண்ணை என்னைக் கலந்தவர்பால் காதற் பிணிப்பைப் பொருந்தினை என்னிடத்தில் பேய்தங்கி யிருக்கிறதென்று அறியாமையுள்ள தாயானவள் உறுதிசெய்து இழிவாகியவெறியாட்டை மேற்கொண்டனள். இங்கே அவள் அதைக் கைவிடுப்படியாகத் துணிந்து தெளிமொழியாகிய மருந்து கொடுப்பாயாக. வேல்போல் விழியும் மயிலியலுமுடைய சேடியே!

வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல்.

மணஞ்செய்து கொள்ளுதற்கு இடையே பொருளீட்டுவான் பிரிதல்.

என்பொருட் பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல்.

37. பொருளிலை யேனலம் பூண்பதின் முற்கடற் பூதலத்தே
மருளிலை வேல்விழி மாதே வரைந்திட வாய்ப்பகொண்டு
தெருளில கக்கடி திற்சேர் குவலவட் டேற்றியுரை
அருளில கும்முகை தீனுரை போலென் னறையுமொன்றே

இ-ள். மயக்கந்தரும் இலைவடிவாகிய வேலனைய கண்களையுடைய பெண்ணே! திரவியமில்லையாஞல் கடல்சூழ்ந்த பூவுலகில் இன்பம் பொருந்துவதில்லை.(ஆதலால்)மணத்திற்கு ஏற்றநிதி தேடிக்கொண்டு தெளிவு விளங்க விரைவில் வருகின்றேன். நீ உன் தலைவிக்கு உரைத்துத் தேற்றுவாயாக. கருணை விளங்கும் முகைதீன் மொழிபோல் எனது சொல்லும் ஒன்றேயாகும்.

தலைவி இரங்கல்.

38. கருப்பொன் னெனவெணைக் கண்டு வெறுத்துக் கதிருமி
அரும்பொன் றரவகன் ருரெனிலென் னுடலங்கமலாம்[மும்
தருமும்பொன் றிடமெலிந் தாவியும் போமினித் தன்னியவப்
பெருமும்பொன் னெவர்பெற வார்முகை தீன்வரைப் பெண்

மயிலே

இ-ள். முகைதீனது மலைலுள்ள பெண்மயில் போன்ற தோழீ! என்னை இரும்பெனத் தெளிந்து வெறுப்புற்று சுடர்வீசும் அரிய பொன்தேடச் சென்றார் என்றால், இனி மேல் எனது உடலிலுள்ள உறுப்புகளெல்லாம் திருப்புபோல் வாடி உயிரும் பிரியும். (அதன்பின்) கிடைத்த அம்மிருந்த பொன்னைப் பெறுபவர்கள் யார்?

பாங்கி வலம்புரிகேட்டு அவன் வரவறிவுறுத்தல்.

தன் வரவைத் தலைவிக்கு அறிவுறுத்தற்குத் தலைவன் ஊதிய சங்கு முழக்கத்தைப் பாங்கி கேட்டு அவன் வரவைத் தலைவிக்கு அறிவுறுத்தல்.

39. கார்கண்டுமன்மதன்போர்கண் டுழன்றுசெங்காந்தளங்கை
சேர்வண் டுகமெலி சேயிழை யேமுகை தீன்பொருப்பர்
தேர்வந் ததுதெரி வித்தது சங்கொலி தேனினம்பா
லார்வண் டொலித்தலிற்கேட்டிலையோமணி மாகுமின்னே

இ-ள். மேகத்தைக் கண்டும், மாரன் போரைக் கண்டும் வருந்தி செவ்விய காந்தள் மலரன்ன கரங்களினுள்ள வளைகள் கீழ் விழுமாறு மெலிந்த தலைவியே! முகைதீனது மலைத் தலைவருடைய இரதம் வந்ததை வலம்புரிபோசை தெரிவித்தது. வாசனை நிறைந்த தினைக் கூந்தலிற் சேர்ந்த வண்டுகளினொலியால் நீ கேட்டாயில்லை போலும். இப்போதே மணம் நிகழும் (வருந்தாதே).

வரைவு மலிவு.

கல்யாணத்தைப் பற்றிய செய்திகளின் மிகுதி

தலைவன் முலைவிலை விடுத்தமை பாங்கி தலைவிக்கு உரைத்தல்

தலைவன்பரிசம் விடுத்தமையைத் தலைவிக்குப் பாங்கி அறிவித்தல்.

40. முருந்துந் தளவு மிகநா ணுஞ் மூரன் முகில்சிரத் திற்
பொருந்துங் கொடியனை யாய்முகை தீன்புகழ் போனிமி
ர்ந்து
திருந்துன் றனவிலை யாயெலை யற்ற செழுந்தனங்கள்
மருந்தும் பொருவு மகிழ்நர்தந் தார்மணம் வாய்த்திடுமே

இ-ள். பயிலிறகடி முள்ளும் முல்லையரும்பும் மிகவும் வெட்குப்படியான பற்களைக்கொண்டு மழையைத் தலையிற் கொண்டகொடிபோன்றவளே! முகைதீனுடையகீர்த்திபோல் செம்மையாயோங்கிய உனது கொங்கைகளுக்கு விலையாகக் கணக்கற்ற செழித்த திரவியங்களை அமுதமுமொத்த தலைவர் கொடுத்தனர். இனி மணப்பொருந்தும் (நீ, வருந்தற்க.)

பாங்கி தமர்வரை வெதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தல்

தலைவன் வரைதலைத்தமர் ஏற்றுக்கொண்டமையைப் பாங்கி தலைவிக்கு உணர்த்துதல்.

41. பொன்னுங் கதிரும் புனைமணி தூற்றிய பூண்களுடன்
இன்னும் பலவு மியங்கு வைப்பநல் லேல்வைதனில்
மன்னும் படிதந் தனர்முகை தீன்வெற்பர் மாமகிழ்வு
தன்னும் படிநம் மேற்றனர் தூமொழிச் சுந்தரியே

இ-ள் முகைதீனது மலைத்தலைவர், பொன்னும் வத்திரங்களும் அழகிய இரத்தினங்கள் பதித்த ஆபரணங்களோடு மற்றும் வேண்டுவன பலவும் வாத்தியங்கள் முழங்க நல்ல முகூர்த்த நேரத்தில் வாய்க்கக் கொடுத்தனர். நம் குடும்பத்தார் மிகக் களிபொருந்தும் வண்ணம் பெற்றுக்கொண்டனர். கபடமற்ற மொழியையுடைய அழகியே!

தலைவி உவகையாற்றாது உளத்தொடு கிளத்தல்

உவகை ஆற்றாது—உவகையை அடக்க இயலாமல்.

42. கொந்தஞ் செறிபொழில் வாவிகள் சூழ்திருக் கோம்பை
யில்வாழ்
சந்தஞ் செறிமுகை தீன்பகை போலலர் தாங்கியவாய்
பந்தம் படும்படை மாரனு மோடிப் பதுங்கிடுவான்
நந்தந் தலிவர் மணஞ்செய வுற்றனர் நன்மனமே.

இ-ள் எனது நல்லமனமே! பூங்கொத்தும் அழகும் நெருங்கிய சோலைகளும் தடாகங்களும் சூழ்ந்த சிறப்பான கோம்பை நகரில் வாழும் அழகு பொருந்திய முகைதீனுடைய பகைவர்களைப்போல் அலர் தூற்றிய மங்கையர் வாய்கள் அடைபட்டுப் போகும். ஆயுதங்களுடைய மன்மதனும் ஓடிஒளிந்து கொள்வான். நம்முடைய தலிவர் மணம்புரிய வந்தனர்.

மணம் பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்,

கலியாணத்தின் பொருட்டுத் தூர்க்காதேவியைத் தலிவி வழி படும் நிலையை தலிவனுக்குத் தோழி காட்டுதல்.

43. சுரக்குஞ் சுரபி நிகர்முகை தீன்வரை சூழுமிரு
கரக்குஞ் சரமீன யாயணக் கைமணக் காப்பெனவே
வரக்குஞ் சரியீன யாண்மலர் தூவி வழுத்தியருள்
தரக்கும்பிடுநிலை காண்டியின் னேயிவண் சார்ந்துநின்றே

இ-ள் நீரைப் பெருக்கும் சுரபி நதியை, அல்லது அமுதைப் பெருக்கும் காமதேனுவை யொத்த முகைதீனது மலையிலுலாவும் இரு கைக்களையுடைய ஆண்யானை யொத்த தலிவா! தூர்க்கையைக் கலியாணக் காவலாக வரத்தையுடைய தேவயானை யன்னவள் மலரைத் தூவி வாழ்த்தி, கிருபை தரும்படி (கேட்டு) வணங்கும் நிலையினை இப்பொழுது இங்கே ஒதுங்கி நின்று காண்பாயாக.

வரைதல்

மணஞ் செய்துகொள்ளல்

வரைந்துழிக் கண்டோர் மகிழ்ந்துரைத்தல்

மணஞ்செய்து கொண்டவிடத்து அதனைக் கண்டவர் மகிழ்ந்துகூறுதல்.

44. செந்தா மரைக்கணன் செந்திருமா தினைச்சேர்ந்தமையும்
அந்தா ரயிலவ னூர்குற மானை யணைந்தமையும்
நந்தா துவமை யுரைத்திட லாமிவர் நானிலத்தில்
மைந்தார்ந் திடுமுகை தீன்புகழ் போல்வள மன்னுகவே.

இ-ள். செவ்விய தாமரை மலர்போற் கண்களையுடைய திருமால் இலக்குமியை யணைந்தமையும், அழகிய மானை யணிந்த வேலைக்கொண்ட முருகன் (மலையிற்) பொருந்திய குறவள்ளியைக் கலந்தமையும் (இவர்களுக்கு) கெடாத உவமையாகக் கூறலாம். இப் பூமியில் வல்லமை நிறைந்த முகைதீனது கீர்த்தியைப்போல இவர்கள் செழுமை நிலைபெற வாழ்க.

கோம்பை முகைதீன் பலதுறைக் கோவை

முற்றுப் பெற்றது.



கோம்பை முகைதீன் வண்ணம்

காப்பு.

கலிவிருத்தம்.

ஆதி யானை யமல வருட்பெருஞ்
சோதி யானைத் துலங்கிடு தூயனைத்
தீதி லானைத் திகழ்பரி பூரண
வோதி யானை யொருவனை யுன்னுவாம்.

இ-ள். சகலத்திற்கும் முதல்வனை, குற்றமில்லாத கிருபை நிறைந்த பேரொளியானவனை, விளங்குகின்ற பரிசுத்தனை, தீமையில்லானை, ஒளிர்கின்ற சம்பூரண ஞான வடிவனை ஓப்பற்றவனாகிய இறைவனைக் கருதி வணங்குவாம்.

சந்தக் குழிப்பு.

தானனகந்ததனா தனா, தானதந்ததனா, தன
தானதந்தன தானதந்தன தானதந்தன...தந்ததந்தான
தனதாந்த தனதான தானனா.

ஆண்கிலி

பூதலமுய்ந்திடவே தயை மேவு நெஞ்சுடனே கலி
மாபெருந்தனி யாரணந்தரு வாயகெங்குநி, றைந்தகந்தேவ
தூதென வந்திடுமா நபி மாரினந்தனிலே மணி
யாகவந்தநி தூபசுந்தர ரூடும்புவி ளம்பவன்றேவ
போத மிகந்துடையா ரவி சூழ்தணக் தொடையார் நபி
நாயகன்கனி வாய்புகழ்ந்தப ராபரன்றனை யென்றுகன்றுக

மனமார்ந்த குணமேவு சீரினன்

பூமலரம்புடையா னிக ரோசிறந்துடையா னலர்
மாதகந்கிய மார்பனங்கலி மேவுசிந்தைசி றந்தபண்பாள
ரவனண்டமூலா வுறு காசெனும் கொடையா னிகல்

யாவும்வென்றணி வாகைகொண்டமெய் வீரனன்புறு
நெஞ்சகன்பாகு
பூமதுமென்கனிபா னிகர் போதவின்சொலனீள் வரை
போலுரம்பெறுவாகனிந்திரபோகமிஞ்சியவன்பெருஞ்சோலை

வளர்கோம்பை நகர்வாழும் வாய்மையான்

சூதகெருங்குதெனர், பல, வார்மரம்புடைசூழ் - பொழின்
மேவுமந்தட வாவியுந்தொடு கூவமுஞ்செறி கின்றபண்பூவும்
வாணி முந்திருவே வளர் மாடமும்பலவே யுடை
யானுறுந்தன நீடிடும்பெரி யானருங்கலை கொண்டு பண்பான
தூய்மைபெற்றம்புலீவோர் தமிழ் சூடிடும்புகழர் னுயர்
யோகமுந்தெரி வானறப்பயில் சீர்நிரம்பிய வன்சிறந்தாக

முனமோர்ந்து தெளிஞான மேன்மையான்.

சூழுமருங்கலைதேர் கவி வாணர்தந்திறலே யறி
வாலறிந்தவ ராகமுங்கவி மேவவுந்தரு செங்கையன்பூரி
போலமைமைந்தர்களே பெறு சீர்நிரம்பியமா புகழ்
சூடுசுந்தர ஞடிவந்தவர் சோர்வுகண்டுவ ழுங்கிடும்பாரி
தூயவருங்கலைமா மதி யானனன்றனேர், தகை
யானுயர்ந்தவு தாரனெண்டிசை மேவுறும்பெயர் கொண்ட
சிங்காச

முகைதீன்ற னுயர்சோலை மாமினுள்.
பெண்கலை

மாதரருங்கலமே மயி லேபசுங்கிளியே யென
காரணந்தனி யேபுகுந்ததெ னுர்தவங்கொலி யைந்தின்றுசை
மீறிடவங்கசனே ரனி போர்தொடங்கினனே மலர்
வாளிபைங்கழையாநெடுஞ்சிலை கோலியுந்தவ ருந்துகின்றேனை
மாருதம்வந்ததடீ குயில் வாய்திறந்ததடீபுது
மாமணம்புண ரேர்சுகம்பெடை கூடல்கண்டுமொ துங்கலிங்
கேது

தனமேந்து கொடியான பூவையே.

வாளியிருந்தனவே சிலை தாமிரண்டுளவே யொரு
தேருமுந்திரு வாரணங்களு நேரிருந்தன நின்பெருமபோரி

லாகமுலைந்ததடி விளை மோக மிஞ்சுதடி யிள
நீருமந்தட வாவியுஞ்சுவை மாமருந்துமி ருந்துமென்சோக
வாதையகன்றிடவே செய வேநினைந்திலநீ வெகு
பூரிகொண்டுறு பேயெனுந்தகை லோபமொன்றினை
யென்றிடுப்போது

சவிதாங்கு நகைகூடி நாணினுள்.

மோதுதடங்கட லூடுழல் வார்பெறும்புணை போ னகை
யாலணங்கினை யாளையங்கைக ளால்வலிந்துமுயங்கியம்போது
நேர்புகலுங் கனிவா யும் சேயருந்தியுதா லிடை
மேலிடுந்துகி னீவியங்கச வீடுகண்டுக னிந்தவின்போடு
மூகியணைந்துயிர்சே ருட முமுமொன்றினவே மத
வேளிருங்கலை யாலருஞ்செயல் கூடியின்புத துப்பிடுங்காலை

கனவாஞ்சை கொடுகூடி யாடினுள்.

மோடுறு கொங்கைகளா கிய மூரிவெங்கயமார் பிடை
மூழ்கவங்கிளி போன்மொழிந்துக் போலமென்றும றம்பயின்
வார்குழையொன்றிடுகூர் விழி வாள்பிறங்கிடவே கொடி[ரோடி
நேரொடுங்கிடை பேதுடங்கிட வேவிளங்கிழை யுங்கலந்தால
மூரலெழுந்திடவே யெனை நேர்கலந்தனளே மயி
லேயெனுந்தகை யாளொடுஞ்சமபோகமவ்து கிரம்பிடுங்காலை

களியார்ந்த சுகமாக மோவுமோ.

இவ்வண்ணத்தின் எட்டுத் தொங்கல்களையுந் தொடுத்த கவி.

மனமார்ந்த குணமேவு சீரிஞன்
வளர்கோம்பை நகர்வாழும் வாய்மையான்
முனமோர்ந்து தெளிஞான மேன்மையான்
முகைதின்ற னுயர்சோலை மாமினுள்
தனமேந்து கொடியான பூவையே
சவிதாங்கு நகைகூடி நாணினுள்
கனவாஞ்சை கொடுகூடி யாடினுள்
களியார்ந்த சுகமோவ லாகுமோ.

வண்ணமென்பது சந்தக்குழிப்புகளுடன் அகப்பொருட் டுறைகளைத் தழுவி வரும்.

கோவை, வண்ணம், முதலியவைகளில் கற்பனைத் தலைவன், பாட்டுடைத் தலைவன், என இருவருண்டு. அகப்பொருள் நிகழ்ச்சிகளுக்கு உரியவனுகவும், அனுபவிப்பவனுக்கவும் கற்பனைத் தலைவன் வருவன். அந்நிகழ்ச்சிகள் நிகழும் இடத்திற்கு உரியவனுகப் பாட்டுடைத் தலைவன் வருவன். இதில் ஆண்கலை, பெண்கலை, என இருபிரிவுண்டு. ஆண்கலை, பாட்டுடைத் தலைவனது, தெய்வங் கொள்கை, மரபு, திரு, வீரம், திறல், அறிவு, ஒழுக்கம், கொடை, அழகு, முதலியவைகளைக் கூறும். பெண்கலை அகப்பொருட்டுறைகளைமட்டுங் கொண்டுவரும்.

இவ்வண்ணத்தில், கற்பனைத் தலைவன் பாட்டுடைத் தலைவனுடைய சிறப்புகளைக் கூறி அவனது சோலையில், தலைவியைக் கண்டு கலந்து மகிழ்ந்ததாகக் கூறுகின்றன்

இது கற்பனைத் தலைவன் கூற்று.

பூதலம்— —சீர்ஞல்

இ-ள். பூவுலகம் ஈடேறும்படி கருணைபொருந்திய திருவுள்ளத்துடனே கலிமாவைப் பெற்றுள்ள ஒப்பற்ற வேதத்தைத் தந்த திருவாயை யுடையவரும் எவ்விடத்திலும் நிறைந்த நமது கடவுளனுப்பிய தூதர்களாக வந்த பெருமை பொருந்திய நபிமார்களின் கூட்டத்துள்ளே இரத்தினமாக வந்து அவதரித்த பரிசுத்தமான அழகுடையவரும், அக்காலத்தில் உடும்பைப் பேசும்படி கட்டளையிட்ட ஞானம் நிறைந்தவரும், வண்டுகள் மொய்த்துள்ள குளிர்ச்சியும் அழகும் பொருந்திய மாலையணிந்தவரும், ஆகிய நபிநாயகத்தின் கொவ்வைக் கனிபோன்ற திருவாயாற் புகழப்பெற்ற மெய்க் கடவுளே எப்பொழுதும் சிறப்பாக மனத்திற்கொண்டநற்குணந் தங்கிய செல்வமுள்ளவன் - என்பதாம்.

பூமல— —வாய்மையான்

இ-ள். அழகிய மலர்ப் பாணங்களையுடைய மன்மதன் போல் அழகு மிக்கவன். தாமரைப்பூவில் வாழும் இலக்குமி வசிக்கப்பெற்ற மார்பினன். விளங்குகின்ற கல்வி நிறைந்த உள்ளத்தில் சிறந்த குணங்கள் அமைந்தவன். நாவலவன். ஆகாயத்தில் உலாவும் மேகமென்னும்படியான கொடையுடையவன். பகைவரையெல்லாம் வென்று அழகிய வெற்றிமாலை சூடிய உண்மைப் பராக்கிரமன். அன்புள்ள நெஞ்சினன். வெல்லக்குழம்பு பொலிவுள்ள தேன் மெல்லிய முக்கனி பால் இவைகளைப்போல் அறிவு நிரம்பிய இனிய சொல்லினன். நெடிய மலைபோல் வலிமைபெற்ற தோளினன். இந்திரன் போல் சுகபோகமிக்கவன். பெரிய சோலைகள் வளர்கின்ற கோம்பை நகரில் வாழ்கின்ற சத்தியவான் - என்பதாம்.

சூதநே— —மேன்மையான்

இ-ம். மாமரங்கள் தென்னைமரங்கள் பொருந்திய பலா மரங்கள் நிறைந்த பலமரங்கள் ஆகியவை எப்பக்கமுஞ் சூழப் பெற்றசோலையும், அழகுபொருந்திய விசாலமான தடாகமும், தோண்டப்பட்ட கிணறுகளும், பலனிதப் பயிர்கள் நெருங்கியுள்ளனவான திருந்திய நிலங்களும், வர்த்தகமும், இலக்குமி வாழும் அநேக மாளிகைகளும், உடையவன். மிகுந்த திரவியங்கள் ஒங்கப்பெற்ற பெரியோன். அருமையான நூலறிவு கொண்டு நற்குணமான பரிசுத்தம் பொருந்திய கவிஞர்களது தமிழ் மாலைபுனைந்த புகழுடையவன். உயர்ந்த மனக்குறிப்புகளைக் குறிப்பாலுணர்ந்து தெளியும் அறிவிலுயர்ந்தவன் - என்பதாம்

சூழமருங்— —மாமிளர்

இ-ள். ஆராயத்தக்க பெரிய நூல்களை ஆராய்ந்த கவிஞர்களுடைய தராதரங்களைத்தன் அறிவினாலறிந்து அவர்களது மனமுங் களிப்படையக் கொடுத்தலாகிய பெருங்கரத்தான் பொன்போல் சிறப்படைந்த மக்களையுடையவன் திருநிறைந்த

வழங்கியவர்

பெரிய கீர்த்தியைப் பூண்ந்த அழகன், தன்னையடைந்தவர் களுடைய தளர்ச்சியைக் கண்டு நிதி கொடுக்கின்ற பாரிவள் ளல் ஒத்தவன். சுத்தமான அரிய சந்திரிகையைக்கொண்ட மாண்புள்ள சந்திரன் போலும் முகத்தினன். தனக்குத் தானே இணையானவன். மேலானவுதாரன். எட்டுத் திசை களிலும் பரவிய பிரதாப அலங்கார மூகைதீனது உயர்ந்த பூங்காவில் நின்ற பெருமை பொருந்திய மின்போன்றவள் - என்பதாம்.

மாதரருங்— —பூவையே

இ-ள். பெண்ணினத்திற்கு அரிய ஆபரணம் போன் றவளே! மயிலே! பசியகிள்ளையே! இச்சோலையின் கண்ணே நீ தனியாக வந்ததற்குக் காரணம் யாது? எனது தவப் பயன் இன்று வந்து பொருந்தியதோ! ஆசையதிகரிக்க மாரனவன் மிக்க போரைத் தொடங்கிவிட்டான். மலர்ப் பாணங்களைப் பசிய கரும்பாகிய நெடிய வில்லை வளைத்துச் செலுத்துவதால் நான் தன்புறுகின்றேன். அந்தத் தென் றலும் வந்துவிட்டதடி. குயிலும் வாய்திறந்து கூவுகின்ற தடி. புதிதாக மணங்கூடிய அழகிய கிளிகள் தம் பெண்கிளிக ளோடும் கூடுதலைக் கண்டிருந்தும் இங்கே விலகி நிற்பது ஏன்? கொங்கைகளைச் சுமந்த கொடியான் பூவை மொழி யாளே - என்பதாம்

வாளியி— —நாணிழை

இ-ள். அப்புகளும், இருவிற்களும் உன்னிடம் இருக் கின்றனவே. ஒரு இரதமும் செலுத்துகின்ற இரு யானை களும் நேராக இருக்கின்றன. உனது பெரிய யுத்தத்தில் எனது மனம் நெகிழ்ந்து விட்டதடி. உண்டான மோகம் அதிகரிக்கின்றது. இளநீர்களும், அழகிய விசாலமான தட மும், மதுரமான அரிய அமுதமும், உன்னிடமிருந்தும் என்னை மோகச் சோக வேதனை நீங்கும்படி புரிய நீ நினைத்தா யில்லையே. மிகுதியாகிய திரவியங்களை அனுபவியாமலும், பிறர்க்குதவாமலும், காத்திக்கொண்டிருக்கிற பேயையொத்த

குணமுடைய உலோபிகளையொத்தனை. என்று நான் கூறிய காலையில் பிரகாசம் பொருந்திய புன்னகை காட்டி நாணுற் றுள்.

மோது— —யாடினுள்

இ-ள். கரையைத் தாக்குகின்ற விசாலமான கடலின் நடுவே அகப்பட்டு வருந்துபவர்கள் பெற்ற தோணிபோன்ற புன்னகையால் தெய்வப் பெண்போன்றாளை எனது அழகிய கைகளால் வலியப் பற்றித் தழுவி அழகிய குமுத மலருக்கு இணையாகக் கூறும், கொவ்வைக் கனிவாய் அமுதத்தை யுண் டும், நூல்போன்ற இடையிற் பொருந்தி வத்திரத்தை நீக்கி மானனது மாளிகையைக் கண்ணுற்று முதிர்ந்த இன்பத் துடன் நெருங்கிச் சேர்ந்து உயிர்தங்கிய உடல் இரண்டும் ஒன்றென்னுப்படி செருக்குள்ள மானனது விரிந்த ஆகம முறைப்படி ஆலிங்கனம் முதலிய அரிய செயல்களைப் புரிந்து இன்பம் நிறைந்து வழியுப்போது மிகுந்த பாசத்துடன் சேர்ந்து விளையாடினுள் - என்பதாம்

மோடணி— —மோவுமோ

இ-ள். பெருமை பொருந்திய தனங்களாகிய வலிய வெவ்வியயானைகள் எனது மார்பின்கண்ணே யழுந்தவும் கிளிபோல் கொஞ்சிப் பேசி என் கன்னங்களைச் சுவைத்துக் கொலைத்தொழில் பழகிச் சென்று நீண்ட காதுகளிற் பொருந் துகின்ற கூரிய கண்களாகிய வாள்விளங்கவும், கொடிபோ லொடுங்கிய இடை துவளவும், விளங்குகின்ற ஆபரணங்கள் கூடி யொலிக்கவும், சரச நகையுண்டாகவும், என்னை நேர்ந்து கூடினுள். மயில் போன்ற சாயலை யுடையாளுடன் சமமாகிய போகம் உண்டாகி நிறைந்த காலத்திலே மகிழ்ச்சி பொருந் திய சுகம் என்னுள்ளத்தை விட்டு நீங்குமோ (நீங்காது) என்பதாம்.

———

அகப் பொருள் தனித்துறைக் கவிகள்.

இது தலைவியின் அழகையுங் காதலையும் பாங்கி தலைவனிடம் கூறுதல்.

(1) ஆசிரியச் சந்த விருத்தம்.

கருமுகில் சுரிகுழல் விதுநுதல் சிலைநுதல்
கணைவிழி வளைகுழையே
கமழ்குமிழ் வளிவழி துகிரிதழ் முகைகைகை
கணடியு முயர்சுனமே
வருவளை மிடறமை புயமுள ரிகைகட
மலைமுலை வடமலையே
வயிறிழை யிடையர வல்குறு தியதிகர்
வளர்துடை கணையுறைவே
உருமிரு கணையடி கமடமும் வெளியடி
யொளிர்வன சமுமடியே
உறுகுழல் கிளிகுயின் மதுமொழி மயிலிய
லுயர்பிடி யனநடையார்
திருமக ளனையரு னிடமயல் பெருகின
டெளிதமி ழுணர்முகைதீன்
திகழ்பெயர் பெறுபுர வலிவ டனமகிழ்
செறிதர வணைகுவையே

இ-ள். கரியமேகம்போல் நெளிந்த கூந்தலும், சந்திரன் போல் நெற்றியும், வில்லனைய புருவங்களும், அம்புபோன்ற விழிகளும், வள்ளைக் கொடியொத்த காதுகளும், மணந்தரும் குமிழம்பூ வொத்த மூக்கும், பவளம் போன்ற அதரங்களும் முல்லையரும்பொத்த பற்களும், கண்ணாடி போன்ற கபோலங்களும், ஊர்கின்ற சங்குபோன்ற கழுத்தும், மூங்கிலொத்த தோள்களும், தாமரை மலரனைய கரங்களும், குடமும் மலையும் போன்ற தனங்களும், ஆலிலைபோன்ற வயிறும், நூலனைய இடையும், பாம்பின் படமனைய நிதம்பமும், யானையின் கரமனைய துடைகளும், அம்புகள் தங்கும் தூணிபோன்ற அழகு

மிக்க கணைக்கால்களும், ஆமை முதுகொத்த புறவடிகளும், தாமரை மலர்போன்ற பாதங்களும், சுவைமிக்க குழல் கிளி குயில் தேன்போன்ற சொற்களும், மயில்போன்ற சாயலும், உயர்ந்த பெண்யானை அன்னம் போன்ற நடையும், பொருந்திய இல்க்குமி போன்றவள் உன் மீது மையல் மிகுந்தாள். தெளிவுள்ள தமிழறிந்த முகைதீ னென்ற விளங்குகின்ற பெயரைக்கொண்ட மன்னவா! இவளை மகிழ்ச்சிகூரச் சேர்வாயாக - என்பதாம்.

இதுவுமது.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

(2)உந்தியெனுஞ் சுழியெழுந்த வுரோமமென் னும்பசுந்தாளி
னுபய மான
அந்தியம்போ ருகமுகைகொண் டாண்மதற்கு மெழுதரிய
வழகே கொண்டாள்
கொந்தியங்குங் கோதைதனைக் கூடிடுவாய் கொழும்பணைசேர்
கோப்பைக் கோவே
சந்திரனேர் நகைமுகத்து முகைதீனே தமிழமுதந்
தனையுண் போனே.

(குறிப்பு):—உந்தி - கொப்பூழ். சுழி - நீர்ச்சுழல். பசுந்தாள் - பசியதண்டு. உபயம் - இரண்டு. அம்போருகமுகை - தாமரை யரும்பு கொந்து - பூங்கொத்து. இயங்கும் - விளங்கும். கோதை - கூந்தலை யுடையாள். கொழும்பணை - செழித்த வயல். கோ - அரசன், தலைவன்.

இது தலைவியின் விரகதாபத்தைக் கூறித் தலைவனைப் பாங்கி யழைத்தல்.

வெ விருத்தம்.

(3) பூவைகிளி யம்மனைகந் தகமறந்தாள் பாயசமும்
புளிக்கு தென்றாள்

பூவையயில் விழிபொருந்தா ளுணவருந்தாள் புலம்பியணை
புரண்டா ளும்பர்
காவைநிகர் கரதலத்துக் கோம்பைமன்னே கருணைமிகக்
காட்டி யெங்கள்
பாவைதனைப் பரிந்தணைவாய் பாணித்தல் பரிபவமாய்ப்
பரவுந் தானே

குறிப்பு:—பூவை- நாகணவாய்ப்புள். அம்மனை-கழங்கு. கந்துகம் - பந்து. பூ வை அயில் - அழகிய கூரிய வேல். உம்பர்கா - கற்பகச்சோலை. பாணித்தல் - காலம் நீட்டித்தல் - பரிபவம் - துன்பம்.

கிள்ளைவிடு தூது.

தலைவி தலைவனிடம் கிளியைத் தூதனுப்புவது.

(4)வண்ணநறும் பசுங்கிளியே கோம்பைநகர்க் கோர்திலக
மானுஞ் சீர்த்தி
அண்ணன் முகை தீனிடஞ்சென் றடுமான் புரிகொடுமை
யகலு லாவி
துண்ணெனவேங் குறுமெனது தலைவிளம்பி யழைத்தி
மதன் தடுக்காய்ப் பேதைப்
பெண்ணிடங்காட் டியவீரப்பெருந்தகைபாற்சாட்டெனநாம்
பேசு வோமே.

குறிப்பு:—வண்ணம் - அழகு. சீர்த்தி-சிறப்பு. அண்ணல் - பெருமையிற் சிறந்தோன். அடல் - வலிமை. அழைத்தி - கூப்பிடுவாயாக.

கனவு நலிபுரைத்தல்.

தலைவி கனவால் தான்படுந் துன்பத்தைப்
பாங்கியிடங் கூறல்.

(5)ஆற்றலினற்றண்ணளியாலருங்கலையாற்பெருங்கொடையா
லறிவாற் பூவி
னுற்றசையும் புகழ்மனக்கும் முகைதீனன் னுவலர்க்கு
நண்பன் பண்பாய்

நேற்றிரவி லிதழ்பருகி முலைநெருடிக் கலந்தானங்
நேரங் கோழி
கூற்றுவன்போற் கூவினதால் விழித்தெழுந்தென்
கோக்காணேன் குலைந்தேன் தோழீ

குறிப்பு:—ஆற்றல் - வலிமை. அளி - கருணை. கூற்றுவன் - யமன்.

நற்றாயிரங்கல்.

(6) தலைவன் பவனி கண்டு மெலிந்த தலைவியின் நிலைகண்டு தாய் வருந்திக் கூறுதல்.

திருமாலைப் புயனழகு திகழ்முகை தீன்பவனிச்
செவ்வி கண்டு
பெருமாலைக் கொண்டெனது பெருந்தவத்தாற்
பிறந்தமடப் பேதை மாரன்
பொருமாலைக் கரும்பாலு மரும்பாலுஞ் சுரும்பாலும்
புணரி மேற்போ
தருமாலைப் பிறையாலுங் குலைத்துலையிற் றளிர்மானத்
தளர்ந்திட் டாளே.

குறிப்பு:—செவ்வி - அழகு. மால் - ஆசை. மயக்கம். சுரும்பு - வண்டு. புணரி - கடல். போதரும் - வரும், உதிக்கும். மான - போல.

தலைவி கூற்று.

தலைவி விரகந் தாங்காது சேடியரிடம் கூறல்.

(7) கந்தரக்குந் தளவருப்புத் தனமடவீர் கலைமதியுங்
கடத்தோன் வெற்ப
கந்தரக்கொந் தளவியதென் காலுமனல் கொடுவரிபோற்
காயப் பாயக்
கந்தரக்குங் கயமுண்விளங் கனியானேன் முகைதீணக்
கண்டே நற்போ
கந்தரக்கும் பிட்டேனென் றுரைத்தழுமி னெனதுயிரைக்
காணு மாறே

இ-ள். மேகம் போற் கூந்தலும் அரும்பனையகொங்கைகளு முடைய சேடிகாள்! கிரணங்களையுடைய சந்திரனும், குளிர்பமுனிவனது மலையிலிருந்து வரும் தென்றலும், தீயும் புலியும்போல காயவும்பாயவும், அதனல்கட்டுக் தறியைமுறிக்கின்ற யானையுண்ட விளாம்பழமானேன். நீவிர்முகதீனைக் கண்டு நல்ல போகசுகத்தைத் தரும்படி வணங்கினேன் எனக்கூறி அழையுங்கள். அதுவே என் உயிரைப் பாதுகாப்பதற்கு வழி

இதுவுமது.

தலைவனது மாலையைப்பெற விரும்பிக் கூறுதல்.

ஒன்பதின்சீர் அகவல் விருத்தம்

(8) திங்கள் வெங்கதிர் சிந்த வுங்கொடு தென்றல்
வந்திடர் செய்ய வுஞ்சமர் செய்யும்வேள்
வெங்க ரும்புகு ழைந்து வண்டமர் வண்டு
விண்டது விஞ்சு கங்குலும் வந்ததால்
மங்கு லுங்கரு வண்டி னங்களு மொன்று
குந்தள வல்லி மெல்லிடை மங்கைநீர்
துங்க னெம்முகை தீன னிந்திடு தொங்க
றந்திலி சென்றி லின்றுயிர் துஞ்சுமே.

இ-ம். சந்திரன் வெப்பமான கிரணங்களை வீசவும், கொடிய தென்றற் காற்றுவந்து துன்பம் புரியவும், யுத்தம் புரியுங் காமனது வில்லாகிய கரும்பு வளைந்து வண்டுகள் தங்கும் மலர்ப்பாணங்களை விட்டது. விரிந்த இரவும் வந்தது. மேகமுங்கரிய வண்டுகளும் போன்ற கூந்தலும் கொடிபோல் மெல்லிய இடையுமுடைய மாதர்காள்! என் தலைவனுடைய முகைதீன் புனையும் மாலையை வாங்கித் தராதிருந்தீராகில் இன்றைக்கே எனது உயிர் நீங்கும் என்பதாம்.

மேகவிடு தூது.

இது, தலைவி, தலைவனிடம் மேகத்தைத் தூதாகச் செல்லச் சொல்லுதல்

பதின்சீர் அகவல் விருத்தம்.

(9) சங்கி னந்த வழ்ந்து றைந்தி டுந்த ரங்க
மொண்டு கொண்டு விண்டு தங்கியே
வெங் கயங்க ளுப்பு யங்க மூங்க லங்க
வென்ற திர்ந்து மின்ற யங்கவே
இங்க ணெங்கு மம்பு சிந்து மங்கு லென்க
ணன்ப மைந்தி லங்கு முகைப்தீன்
தங்க ணண்டி மங்கை கொங்கை யின்சு கம்பு
ணர்ந்தி டென்ற தஞ்ச மியம்பே

இ-ம். சங்குக் கூட்டங்கள் ஊர்ந்து வகிக்கின்ற கடல் நீரை முகந்து ஆகாயத்தில் தங்கி வெவ்விய யானைகளும் பாம்புகளும் கலங்கும்படி வென்று முழங்கி மின்னல்கள் விளங்க இவ்வுலக மெங்கும் நீரைப் பொழிகின்ற மேகங்காள்! நீவிர் என்மீத அன்புகொண்டு விளங்குகின்ற முகைதீனிடத்தில் நெருங்கி இப்பெண்ணினது கொங்கைகளின் இன்பத்தைப் பொருந்துவாயென்று எனது எளிமையைக் கூறுவாயாக-என்பதாம்.

நலம் பாராட்டல்.

தலைவனைக் கலந்த தலைவி நிகழ்ந்தவைகளை மகிழ்ந்து தோழியிடம் கூறுவது.

பதினெரு சீர் அகவல் விருத்தம்.

(10) மடமாதர் சூழ மலர்கொய்ய நீடு வளர்சோலை சென்று
தனியே பிரிந்து மணமேவு சந்தி னிழலி
னிடமேவி நின்ற பொழுதே யனங்க னெழில்கண்டு நாணு
மியல்கொண்ட தேக னிசைமண்டு வள்ளன் முகைதீன்
திடமேவி வந்தெ னகையே யறிந்து திரண்மார் பணைத்த
தரநீர் குடித்தி லகுவார் செறித்த திறன்மா
கடயானை யங்கை யுறவே கலந்த களிசேரு மின்பு
வரியெல்லை யில்லை கணவாள் விழிப்பெண் மயிலே

இ-ள். இளமங்கையர் சூழ்ந்து வர மலர் கொய்யும் பொருட்டு நீண்டு வளர்ந்த சோலைக்குப் போய் நான் தனியாகப் பிரிந்து வாசனை பொருந்திய சந்தனமர நிழலினிடத்தே சேர்ந்து நின்றபோது மாரனும் அழகைக்கண்டு வெட்கும்படியான சாமுத்திரிக முறைப்படி யமைந்த உடம்பைக் கொண்டவனும், கீர்த்தி நிறைந்த கொடையாளியுமான மூகைதீன், உதாரத்துடன் வந்து எனது புன்னகைக் குறிப்புணர்ந்து திரண்ட தனது மார்பில் என்னை யணைத்து வாயிதழ்களின் அமுதைப் பருகி விளங்குகின்ற இரவிக்கைக்குள் அடக்கப்பட்ட தனங்களாகிய வலிய மதயானைகள் தனது அழகிய கைகளிற் பொருந்தும்படியாக என்னைப் புணர்ந்த களிப்பு மிகுந்த இன்பக் கடலுக்கு கரைகிடையாது. அம்பும் வாளும் போன்ற கண்களையுடைய பெண் மயிலே! என்பதாம்.

வாழ்த்துப் பாக்கள்.

குறளடி விருத்தம்.

1. நகைசேர் முகனே
பகைதீ ருரனே
சிகைசேர் சிரனே
மூகைதின் மனனே.

குறிப்பு:—நகை - ஒளி, சிரிப்பு. உரம் - வலிமை. சிகை - கேசம்.

சிந்தடி விருத்தம்.

2. கோம்பை யம்பதி கொண்டவன்
கேம்பொ திந்தமை செஞ்சொலான்
தாம்பி றங்கரு டங்கினன்
சேம்பெ றும்மூகை தீனரோ

குறிப்பு:—தேம் - தித்திப்பு, பிறங்கு - விளங்கு.

அளவடி விருத்தம்.

3. உருவளர் கோம்பையி லுயர்ந்து றைந்துளான்
திருவளர் ஷேக்கப்துல் காதிர் செய்தவத்
தொருப்ய ணுலை குதித்த வுத்தமன்
பெருமுகை தீனெனப் பிறங்கு பெட்பனே

குறிப்பு:—உரு - அழகு, வடிவு. பெட்பு - பெருமை.

நெடிலடி விருத்தம்.

4. அருவ மாயரு ளுருவமை யாதியின் றாதாய்
வருமெ லாநபி மார்கடந் திலகமாய் வயங்கும்
அருமை யார்முகம் மதலகி வசல்லமா மவர்கள்
திருமெ யார்மறை சேர்முகை தீன்செழிக் குகவே

கு-பு:—அருவம்-உருவின்மை- அருளுரு-கருணைவடிவு.

கழினெடிலடி விருத்தம்.

5. தீன்வளர வுற்றநபி நாயகமு மைத்தமறை
தேர்முறை செழித்தசெயலான்
தேன்வளர் சுவைத்தமிழி லேதெளிவு பெற்றறிஞர்
சேர்தரு பழுத்ததருவான்
மான்வளர் மதர்த்தவிழி மாதர்க டமக்குருவ
மாரணை நிகர்த்தவடிவான்
கான்வளர் தொடைப்புய னுலாமுகில் யொத்தகர
காவல னுயர்த்தமுகைதீன்

குறிப்பு:—மறை-வேதம். தேர்-ஆராய்கின்ற. முறை-ஒழுக்கம். சேர்தரு-சேர்கின்ற. தரு-மரம்-மதர்த்த-செருக்குற்ற. உருவ - அழகிய. மாரன் - காமன். கான்-வாசனை. தொடை-மாலை. காவலன்-தலைவன், மன்னன். உரம்-வலிமை

எழுசீர் விருத்தம்.

6. உலகத் துயர்ந்த மிலியா ரதபபெ னுடனே பிணைத்த
பினிகள்

விலகப் பிறந்த சன்பயிற் சிறந்த விறலன் துலங்கு விரதன்
கலகத் திடும்பை புரிவார் கலங்கு கனவே றுறழ்ந்து கலுஞர்
திலகத் திலங்கு முகைதீ னுயர்ந்த திருவார் குணதி பதியே

குறிப்பு:—மிளிர்-விளங்கும். பிணித்த-கட்டிய. விறல்-வலிமை, வெற்றி. பிணிகள்- அடிமைநோய்கள். விரதன்-சத்திய வான். இடும்பை-துன்பம்-கனவறு-மழை இடி.

எண்சீர் விருத்தம்.

7. திருவுருவா யருளுருவா யறிவுருவாய்த் திகழுந்
திறலுருவா கியபரமன் திருவருளால் முகைதீன்

வுருவுடலி லுறைபிணிக ளொருவியொழிந் திடுக
வுறுபகையு மொழிகவிட தொழிகதவ லொழிக

மருவுதனம் வணிகம்வயல் வரைநிலம்பல் சோலை
மாண்புடனே செழித்திலங்கி வளர்ந்துவளம் பெறுக

பெருநலமும் பெறுசுதரின் பேர்நலமு மகிழ்வும்
பெருகவெழி லுடனுடலம் பெட்புறவா ழியரே.

குறிப்பு:—அருள்-கருணை. திகழும்-விளங்கும். திறல்-வலிமை. பரமன்-கடவுள். உரு-அழகு, வடிவு. ஒருவி-நீங்கி. உறு-வலிமை, மிகுதி. இடர்-துன்பம். கவல்-கவலை. தனம்-பணம். வணிகம்-வியாபாரம். வரை-மலை. மாண்பு-பெருமை. சுதர்-மக்கள். எழில்-அழகு. பெட்பு-பெருமை

பாட்டுடைத் தலைவரின் முதற் புதல்வர் ஜனாப். ஷாகுல்ஹமீது இராவுத்தரவர்கள்மீது எழுசீர் அகவல் விருத்தம்

8. வாகுறு வாக மனங்கிலங் தெரிந்தோன் வளர்தமிழ்ச்
சுவைதெளி மாண்புபன்
பாகுறு மொழிய னுயர்புகழ் முகைதீன் பாலருட்
டலிவன்ற பண்பன்

நாகுற தேக னளிர்மதி யூக ஞவலர்
மனமகிழ் நண்பன்
ஷாகுல்ஹ மீது தற்பர னருளாற் சகலசம்
பத்துடன் வாழ்க

குறிப்பு:—வாகு-அழகு. வாகன்-புயமுடையவன். பாகு-வெல்லக்குழம்பு. தலைவன்-முதல்வன், மூத்தவன். நாகு-இளமை-நளிர்மதியூகன்-பெரிய அறிவில் நுட்பன்.

இரண்டாவது புதல்வி திருமதி. காதிர்பீவி அம்மையாரவர்கள் மீது

எழுசீர் அகவல் விருத்தம்.

9. திருவளர் முகைதீன் செழுஞ்சுதை வயங்குந் திருந்திழை மகளிர்க டிலகம்
மருவளர் குழலாண் மயினிக ரியலாண் மகிழ்நனுண் மகிழ்வுறு மாண்பாள்
குருவளர் கோதை யறிவினிற் கற்பிற் கொள்கையிற் கூர்ந்தவுத் தமியாள்
உருவளர் காதிர் பீவிதே வருளா லோங்கிய திருவொடு வாழ்க

குறிப்பு:—சுதை-மகள். திருந்து இழை-திருத்தமாகச் செய்த ஆபரணம். மரு-வாசனை. குழல்-கூந்தல். மகிழ்நன்-கணவன். குரு-நிறம். கோதை-மாலைபோல் பவள். கூர்ந்த-மிகுந்த. தே-தெய்வம். திரு-செல்வம்.

மூன்றுவது புதல்வர். ஜனுப் காதிர்முகைதீன் இராவுத்தரவர்கள் மீது

10. மாதர்நன் னதிபோற் பொருள்வர வுடையான் வாருதி நேர்திரு வாய்த்தோன்
சீதளமுகில்போ-லுதவிடுஞ் செங்கைத் திறன்முகை தின்நடுச் சேயன்
நீதறு வணிகச் செய்கைய னிறைந்த செவ்வியன் கல்வியன் சிறந்த

காதர்மு கியித்தீன் கடவுளி னருளாற் கவின்மிகுந்
திருவொடு வாழ்க

குறிப்பு:—மாதர்- அழகு வாருதி-கடல். முகில் - மேகம்
செவ்வி- அழகு. கவின்- அழகு. திரு-செல்வம்.

நான்காவது புதல்வர்.

ஜனுப். ஷேக்கப்துல்காதிர் இராவுத்தரவர்கள் மீது எழுசீர் அகவல் விருத்தம்.

11. வாக்குரை யாமு னேக்கியுள் ளறிவு மதிதுதி
வாய்த்திடும் வள்ளல்
ஆக்கமுந் தானே யாக்கிய மூகைதீ னருந்தவத்
திலேயசே யானேன்
நோக்குறு மெழில்சேர் வடிவினன் வணிக னுண்மதி
யினனெழுக் கஞ்சேர்
ஷேக்கப்துல் காதிர் தெய்வநல் லருளாற் றிருவொடு
சிறந்துவாழ் குகவே

குறிப்பு:—நுதி - கூர்மை. ஆக்கம் - செல்வம். சேய்-மகன்.
எழில்-அழகு. வடிவு-உருவம்.

குடும்ப வரலாறு.

நிலமண்டில ஆசிரியப்பா.

செந்தமிழ் வளங்குந் தேயந் தன்னிற்
செந்திரு வுறைசிவ காசிச் செழும்பதி
வாழ்ந்தவ னம்பதி தணந்து வளவயல்
சூழ்ந்திடு கோம்பையிற் றங்கிய தொல்லோன்

புண்ணிய மக்கம் போய்வந் ததனுல்
அண்ணல் ஹாஜிய னெனுஞ்சிறப் பமைந்த
ஷேக்கப் துல்கா திர்எனுஞ் செம்மல்
ஆக்கிய தவத்தி லவனியி லுதித்த
சேய்களு மூவர் சீரியற் றபக்கல்
சாய்பெனும் பூமான் தான்மூன் னவனே
நகைமதி முகத்து நல்லியற் பெரிய
முகைதீன் பிள்ளையாம் மூதறி வினனும்

எள்ள லில்லாச் சின்ன முகைதீன்
பிள்ளை வள்ள லும் பின்பிறந் தவரே
தலைமைப் புதல்வன் தமிழ்க்கவி தகையரு
ணிலைமைப் பெரியோ னிறைந்த நீதியன்
தனக்கிளை யான்முகை தீனைத் தம்மு
னெனக்கரு திடுசீ ரியல்பமை யேந்தல்
இறையடி மறவா விதயன் சிதமிக
நிறைதரு நீர னோர்மைய னறிவின்
மிக்கோர் மதிக்கு மிகுமாண் புடைய
தக்கோன் றபக்கல் சாய்பெனும் பூமான்
மூன்றும் புதல்வன் முதிர்ந்த கருணையன்
சான்ற ரன்பன் றழைத்த கல்வியன்
இறைவற் றொழலு மீகையுந் திருவுந்
நிறைவுற் றவன்மிகு நேர்மைய னுதவி
புரிபெருங் குணத்தன் போதன் புண்ணியன்
உரிய தமிழ்க்கலை யுணர்ந்தோ னுணர்ந்தோர்க்
கிருநிதி யுதவு மியல்புடை வள்ளல்
பெருமிதன் சின்ன முகைதீன் பிள்ளையே
இத்தக வுடையார் நாப்ப ணிங்கருள்
வித்தென வுதித்த மேன்மையன் விதரணன்
தமிழ்வரும் கலையுந் தனிநபி நாயக
மமிழ்துறழ் மொழிதரு மருமறைப் பொருளும்
கற்றவன் பரத கண்டஞ் சுதந்திர
மூற்றிடச் சிறைக்கு மஞ்சா வுத்தமன்
தென்னாட் டின்கண் தேசி யத்தினை
மூன்னாட் டினரு ளிவனு முதல்வனே
எலப்பயிரிடு வோர்சபை யியற்றினன்
சிலப் பண்டமிழ் செழிக்கச் செய்தனன்
அருள்வழி விழிய னருங்குணப் பொருப்பு
தெருள்வழி யுளத்தன் செங்கனி மொழியன்
புலவரைப் போற்றிப் புரக்கும் புரந்தரன்
புலமையன் பகையைப் புறம்போச் சூரத்தன்
குறிப்பிற் குறிப்புணர் கூர்மதி கொண்டோன்
நெறிப்படு நேர்மையன் நிறைந்த கருணையன்

மிகையார் திருவினன் விண்புயற் கரத்தன்
முகைதீன் பிள்ளையாம் மொய்ம்புறு வள்ளல்
தந்த சிருர்க ணுல்வர்க டம்மில்
மைந்தரு மூவர் மங்கையு மொருத்தியே
முன்னவ னறிவின் முன்னவ னெனவர்க்கும்
நன்னயம் புரிவோ னற்கலை யுணர்ந்தோன்
வண்மையுங் கருணையும் வயங்கும் வாய்மையுந்
திண்மையும் பஃறொழிற் றிறந்தெரி நீர்மையும்
வணிக மாசியல் வண்டமி ழாங்கில
மணிவிவ சாய மவனியின் வழக்கியல்
தோய்ந்தோன் றீயரைச் சேராத் திண்ணியன்
ஓர்ந்துரை யுரைக்கு முத்தம னத்தன்
செப்புரை கடவாச் சீர்மைய னிளையர்க்
கொப்புற வருளுட னெழுகு முயர்ச்சியன்
பலவுயர் பண்பிற் பயந்தோர்க் கிணையெனச்
சொலநில முதித்த சுந்தர வேளே
ஷாகுல் ஹமீதெனுந் தாட்டிகன் மாதோ
வாகுறு மிவற்பின் வந்த மயிலியற்
கனிமொழி யுடையாள் கவினுறு கல்விற்
பனிமிளிர் கற்பின் பதிமதிக் களஞ்சியம்
சோதர ரென்னுஞ் சுடர்மும் மணிதொடர்
பீத நறுநாண் பிதாவின் பெற்றியுந்
தன்முன் றகவுந் தாங்கின டாமரைப்
பொன்முன் புகலும் புனிதப் பூவையே
பாதி மதிதுதல் பதிக்குயி ரனையாள்
காதிர் பீவிக் கணங்குழை மன்னோ
இச்சால் பினடனக் கிளையா னென்றும்
பொச்சாப் பேதும் பொருந்தான் றிருந்திய
வாணிபத் தொழிலில் வளமிகப் படைத்தோன்
பேணிய கைத்தொழிற் பிறந்த பலபொருள்
கொண்டு வணிகம் புரியுங் கொள்கையன்
மண்டு கல்வியுந் தெரிவான் வளங்கூர்
காதிர் முகைதீன் கண்ணியன் மாதோ
ஆதி பரம்பொரு ளருள்பெறு மிவர்களுள்

எல்லார் தமக்கு மியலா னியனிறை
வல்லான் பொல்லா வழியிற் புகா அன்
லர்த்தக மதியினன் வண்டுகில் வணிகன்
அத்தனுந் தப்முனு முரைமுறை யமைந்தோன்
வணமும் வனப்பும் வாய்ந்த மாட்சியன்
குணமிகுங் கல்வியுங் கொண்டோன் திண்டோள்
ஷேக்கப் துல்கா திர்எனச் சிறந்த
ஆக்கப் பிதாமக னபிதா னத்தனே
அறம்பொரு ளின்ப மெனநல மமைந்த
திறம்படு பயனு ணடுவது சிவணினன்
பெரிய முகைதீன் பிள்ளைப் பூமான்
உரிய முறைமை யொன்றிலவ் வாறெனில்
தாதை நல்லறந் தனையர்க ளின்பமே
மேதைகொ ளவ்வறம் வளர்ந்து விளங்கவும்
பொன்படு பொருளே பூப்பது போல
தந்தை மகிழ்ந்து தனிப்பேர் பெறவும்
மைந்தர் வளர்திரு வாய்த்துக் களிக்கவும்
தான்புரிந் தனனிதைத் தரணியு மறியுமிக்
கோன்புரி நன்றிக்குக் குடுப்பஞ் செய்வதென்
வான்புரி நன்றிக்கு வையகம் புரிவதென்
யூகத் துயர்ந்தோ ளெளிர்மா னத்தன்
யோகத் தறையறி யுரவோ னிறைதரு
வாசி வசப்படும் வகையு மைவகை
மூசிய பூத வொடுக்கமு மூற்படும்
ஆவி யொடுக்கமு மிருவினை யடக்கமுந்
தேவியற் கையெலாந் தெளிந்த சிந்தையன்
இப்பூ மாலு மிவனெழின் மக்களும்
இப்பூ மிசையே யிடர்ப்பா டிலராய்
நோய்பகை மிடிதுனி நூறகா வதம்பின்
போய்வில கிடவே புகழ்பூத் துயர்ந்த
சீருந் திருவுஞ் செய்நிலச் சேர்க்கையுஞ்
சேருந் தருநிறை செழுங்கா வம்புபல்
படிவரை வளமும் பண்புறு மினகளும்
நெடிதறு மூதிய நிறைவர்த் தகமும்

நோக்கியன் மக்களும் நுவலு மின்னன
பாக்கிய மெனைத்துள வினைத்தையும் படைத்து
மேலவ னருளால் விளங்குஞ் செழுஞிழ
லாலெனத் தழைத்து மமையெனக் கிளைத்தும்
அறுகம் புல்லென வேர்பெற் றகமகிழ்
பெறுக வாழ்க! வாழ்க! வாழ்கவே!

இந்நூல் பிரசுர கர்த்தாவாகிய
உத்தமபாளையம்
ஜனப் சி. மு. நயினார் முகம்மது அவர்கள் மீது
அறுசீர் சந்த விருத்தம்.

(1) மதியென மிளிர்வளை நிறைபணை யுத்தம பாளைய
மாநகர்வாய்
வதிதரு திருமகு வரிசையன் வரியளி மண்டு
மணந்திகழும்
பொதியவிழ் கமலையை யுறுதொழி லாலுறை யப்புரி
புயமுடையான்
மதிநுதி பெற்றவ னுலகியல் கற்றுயர் வாகைய
னேர்மையனே

(2) முகமது நாகூர் மீரு னெனமிளிர் மொய்ம்பன்
முயன்றதவத்
தகவுத னன்முது நீர்புடை சூழ்தரு தாரணி
மீதுதயன்
மிகமதி யாரையொ ரணுவள வும்மதி யாத
விறற்றகையான்
சகமதி மாநயி னூர்முக மதுபுகழ் தங்கு
தரத்தினனே.

எண்சீர் விருத்தம்.

(3)

திருமருவு முயர்நயினூர் முகம்ம தென்னுஞ்
செம்மலியான் முகைதின்மேற் செப்பு நூலைப்

பெருமைதரு மச்சியற்றிப் பிறங்கச் செய்தான்
பிரதாபம் பெற்றபிர மாத ஞனன்
வருதிருவுந் தொழிலுமுயர் வளமு மோங்கி
மாண்புறவே நோயற்ற வாழ்வும் வாய்த்திவ்
விருநிலத்தி லிறையவன்ற னருளி னுலே
யிளைஞருட னிவனிலங்கி வாழ்க! மன்னே.

எண்சீர் ஆசிரிய விருத்தம்.

(4) மன்னியவிந் நூலச்சிற் பதித்தோன் மாட்சி
வளர்நயினர் முகமதின்பின் வந்தோ னன
துன்னியசீர் ஷாகுல்ஹ மீதாம் நாமச்
சுந்தரனு மிவன்மணந்த துகிர்ச்செவ் வாயாள்
பன்னுமுகை தீன்முதன்மைப் பால னீன்ற
பான்மொழிச்செல் லம்மாளாம் பாவை யாளுந்
தன்னிகர்மெய்ப் பொருளருளா லாயு ளோங்கிச்
சகலசம்பத் துடன்மகிழ்வு தழைத்தே வாழ்க.

வாழி.

எழுசீர் ஆசிரிய விருத்தம்.

(5) சீர்வளர் முகைதீன் வாழ்கவின் னவன்செய்
செழுந்தவச் சேய்களும் வாழ்க!
ஏர்வளர் நயினார் முகம்மது வாழ்க!
விவன்றனக் கிளைஞரும் வாழ்க!
நீர்வள நிந்நூற் கேற்றம திசைத்த
நெடுந்தமிழ்ப் புலவர்கள் வாழ்க!
கோர்வளர் தமிழு மதுபயி னிலமு
நிமிர்பர தகண்டமும் வாழ்க!

வாழி! வாழி! வாழி!

பிழை திருத்தம்.

சாற்றுக் கவிகள்.

கவி.	அடி.	சீர்.	பிழை.	திருத்தம்.
2	4	2	யின்பதியாற்	யன்பதியாற்
3	4	2	சினியுலுறு	சினியிலுறு
9	4	4	மிந்தமிந்த	மிந்த
16	1	4	பேலாச்	போலச்
29	3	3	ளாய்ந்தவன்	ளாய்ந்தவண்

பாட்டுடைத் தலைவர் வரலாறு.

பக்கம் 3 பாரா 2 வரி 3 சிதக்—சிதம்.

முகவுரை.

பக்கம் 3 வரி 12 தக்கசென்பதும்—தக்கவென்பதும்

கோவை.

கவி.	அடி.	சீர்.	பிழை.	திருத்தம்.
8	4	5	வண்டிமேன	வண்டினமே
13	4	5	ம்முலே	குழலே
43	2	3	யாயணக்	யாயணங்

கோவையுரை.

கவி யுரை.	வரி.	பிழை.	திருத்தம்.
7	4	சூழுகின்றபாங்கி மாரிடையே	சூழுகின்ற சிறந்த அழ இயபாங்கிமாரிடையே.
17	4	அழகுள்ன	அழகுள்ள
19	துறை—முறுவர்—முறுவற்.		
24	6	மாலு	மாறு.
30	3	மகம்	முகம்.
33	5	கூறக்கட்வாய்	கூறக்கடவாய்

வண்ணம்.

பெண்கலி 1 வரி 2 யைந்தின்முசை—யைந்ததின்முசை.

தொங்கற் கவி யீற்றில்.

சுகமோவலாகுமோ—சுகமாகமோவுமோ.

வண்ணவுரை.

கலி.	பகுதி.	வரி.	பிழை.	திருத்தம்.
ஆண்	1	9	நாயகம்தின்	நாயகத்தின்.
பெண்	3	6	பொருந்தி	பொருந்திய.

வாழ்த்துப்பா.

கவி.	அடி.	சீர்.	பிழை.	திருத்தம்
8	2	7	பண்பண்பன்	பண்பன்.

ஆசிரியப்பா.

பக்கம் 43 வரி 13 திருவுந்—திருவும்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
அயல்வெளியீடு
வரிசை எண் 754
வழங்கியவர்
தமிழியல்துறை நூலகம்